பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Selliah Sivapathalingam
GEM & JEWELS MERCHANT
218H. Kasthuriar Road, JAFFNA.
T. Phone: 23794

# உதயன்

விலை ரூ 2/50

செல்லையா சிவபாதலிங்கம்
தங்க வைர நகை வியாபாரம்
218 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சுடர்: 4 சுக்கில ஞூ ஆவணி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 23 (27 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 227

# கொழும்பு பெரியாஸ்பத்திரியில் படையினருக்கு சிகிச்சை மறுப்பு

## இராணுவ வைத்தியசாலைக்கே எடுத்துச் செல்லப்படுகின்றனர்

கொழும்பு, ஆக. 27

இராணுவ நடவடிக்கைகள், மோதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஆகியவற்றின்போது காயமடையும் ஆயுதப்படையினருக்குச் சிகிச்சை அளிக்க கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதி மறுக்கப்படுகிறது,

ஆஸ்பத்திரி ஊழியர்களுக்குக் கிடைத்த ஓர் "அறிவுறுத்தலை" தொடர்ந்தே இவ்வாறு காயமடையும் படை வீரர்களை அனுமதிக்க அவர்கள் மறுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இது குறித்து ஆராய்ந்து மாற்று நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க மேலிடம் சுகாதாரப் பகுதியைப் பணித்துள்ளது:

படை வீரர்களை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க மறுக்கப்படுவதால், காயமடையும் ஆயுதப் படையினர் மற்றும் பொலீசார் இராணுவ ஆஸ்பத்திரிக்கே இப்போது சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான இராணுவ வீரர் ஒருவரும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் கொழும்பு பெரியாஸ்பத்திரி விபத்துப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனல் ஆஸ்பத்திரி ஊழியர்கள் அவர்களை அனுமதிக்க மறுத்துவிட்டனர்: இதைத் தொடர்ந்து அவர்கள் இராணுவ அம்புலன்ஸ் மூலம் இராணுவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதே போல—

மொரட்டுவை பொலீஸ் நிலையத்தில் பணிபுரியும் போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் இன்ஸ்பெக்டர் திருமணி என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை இனந்தெரியாத இரண்டு இளைஞர்களால் சுடப்பட்டார்.

ரவத்தவத்தை சந்தியில் சென்று கொண்டு இருந்த சமயம் இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

காயமடைந்த இன்ஸ்பெக்டர் உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை அனுமதிக்க ஆஸ்பத்திரி ஊழியர்கள் மறுத்துவிட்டனர்.

பின்னர் இன்ஸ்பெக்டர் இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஓ-எ)

## நிலக்கண்ணி வெடி; ஐவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஆகஸ்ட் 27

குருநாகல் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் மூன்று பொலீஸ்காரர்களும் இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இன்னொரு சம்பவத்தில் மினுவாங்கொடையில் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற ஒருவரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்:

நிற்கும்படி உத்தரவிட்ட பின்னரும் அவர் நிற்காமல் செல்லவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது:

பொரலஸ்கமுவ, சம்பஹா ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரண்டு தனித்தனிச் சம்பவங்களில் இரண்டு பேரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர். (ஓ-எ)

## அமைச்சர் ரஞ்சனுக்கு இப்படி ஒரு நம்பிக்கை

இந்திய அமைதிப்படை விவகாரத்தில் வெளியுறவு அமைச்சர் திரு: ரஞ்சன் விஜேரத்தின மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறார். அது சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டு விடும் என்று அவர் கருத்து வெளியிட்டார்.

திரு: விஜேரத்தின இது குறித்துத் தெரிவித்ததாவது:

அமைதிப்படை விலகல் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே தீர்வு காணப்படவேண்டிய விஷயங்கள் பெரிதானவையாக இல்லை: ஆகவே சிறப்புத் தூதர் ஒருவர் இந்தியாவில் இருந்து வர வேண்டிய தேவை இல்லை:

ஜனாதிபதி பிரேமதாசாவின் மீளாய்வு யோசனைகளுக்கு அடுத்த சில தினங்களில் இந்தியாவிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திருத்தி அமைக்கப்பட்ட புதுடில்லி யோசனைகள் இலங்கைத் தூதர் ஸ்டான்லி கல்பகே மூலம் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அமைதிப்படை விலகல் தொடர்பாக உள்ள சகல பிரச்சினைகளும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டு விடும் என்று நான் நம்புகிறேன் —என்றார். (ஓ-எ)

## யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் வெளிநடப்பு

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 27

யாழ். பிரதம தபாலக ஊழியர்கள்நேற்று திடீரெனவெளிநடப்பில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மாலை விநியோகப்பகுதியைச்சேர்ந்த ஊழியர் ஒருவர் சிலரால் கூட்டிச் செல்லப்பட்டதை கண்டித்தே இந்த வெளிநடப்பு இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

★ சகஊழியர் விடுவிக்கப்பட வேண்டும்:

★ கடமை நேரத்தில் இப்படியான சம்பவங்கள் இடம் பெறக் கூடாது.

என்று ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர்:

கூட்டிச்செல்லப்பட்டவர் நேற்று நண்பகலளவில் விடுவிக்கப்பட்டதை அடுத்துஊழியர்கள் வேலைக்குத்திரும்பினர்.

வெளிநடப்பு காரணமாக நேற்று தபால் விநியோகம் நடைபெறவில்லை. எனினும் தபால் சேகரிப்புவழமைபோல் நடைபெற்றது. பிரதமதபால் நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று முழுவதும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்: அவர்கள் வெளிநடப்புச் செய்யவில்லை. (ஓ-9-6)

## தெற்கில் தேங்கிக் கிடந்த தபால்கள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், ஆக: 27

கொழும்பிலும் மற்றும் தென் பகுதியிலும் தேங்கிக் கிடந்த வடபகுதிக்கான தபாற் பொதிகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன:

கடந்த இரண்டு வாரங்களாக தென்னிலங்கைத் தபாற் பொதிகள் இங்கு வந்து சேராதிருந்தன: நேற்று முன்தினம் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, பஸ் மூலம் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன:

அதே சமயம் இங்கிருந்து தென்பகுதிக்கான தபால் பொதிகள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன. (ஓ-6-9)

## கிராமோதய சபையின் முன்னாள் தலைவர் கொலை!

### முல்லைத்தீவு செல்வபுரத்தில் சம்பவம்

முல்லைத்தீவு ஆகஸ்ட் 27

முல்லைத்தீவைச் சேர்ந்த செல்வபுரத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கிராமோதய சபையின் முன்னாள் தலைவர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்:

கொலையுண்டவர் மி. இ: யோகநாசன் (வயது 40) என்பவர் ஆவார்: இவர் ஆறு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-92)

**ஞானக்கதிர்**

நல்லூர்க் கந்தனின் நான்குவர்ண அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ளது.

இன்று நல்லூர் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வாங்கிப் படியுங்கள். விலை ரூபா 5 மட்டுமே.

## 500 ஜவான்கள் திரும்பினர்

கொழும்பு, ஆக. 27

இந்திய அமைதிப்படையின் பாரசூட் ரெஜிமென்டைச் சேர்ந்த 500 ஜவான்கள் நேற்று காங்கேசன் துறையில் இருந்து 'கொங்கன் சக்தி' என்ற வர்த்தகக் கப்பல்மூலம் தாயகம் திரும்பினர். (ஓ-எ)

## இந்தியப் படை வெளியேற்றம்; இரு கருத்துக்கள் எமக்கு இல்லை

### ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக: 27

இந்தியப் படைகள் வெளியேற்றம் தொடர்பாக எமக்கு இரு கருத்துக்கள் கிடையா:

உடனடி வெளியேற்றம் நடைமுறைக்குச் சாத்தியப்படாத நிலையில், படையினரின் வெளியேற்றம் குறித்துத் திட்டவட்டமான கால எல்லை தீர்மானிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு: வே: பாலகுமாரன் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்:

இந்திய அரசு தொடர்பாகவும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாகவும் தமது நிலைப்பாடு பற்றியும் சில தரப்பினர் பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளனர் என்றும்—

அத்தகைய சூழ்நிலையில் தமது நிலைப்பாட்டைத் தமிழ் பேசும் மக்களுக்கு தெளிவுபடுத்தவே, இந்த அறிக்கையை விடுப்பதாகவும் திரு: பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

அந்த நீண்ட அறிக்கையில்—

1988 மார்ச் ஐந்தாம் திகதி வெளியிடப்பட்ட கைநூலில் தெரிவிக்கப்பட்ட நிலைப்பாடும்—

1989 பெப்ரவரியில் பொதுத் தேர்தல் தொடர்பான அரசியல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிலைப்பாடும்—விவரிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் தாம் நாடாளுமன்றம் செல்ல நேரிட்டது பற்றியும், மீண்டும் ஆயுதம் தரிக்க நேரிட்டது பற்றியும் அவற்றுக்கான காரணங்கள் குறித்தும் திரு: பாலகுமாரன் தமது அறிக்கையில் விவரமாக விளக்கியுள்ளார்:

தமது அறிக்கையில் திரு: பாலகுமார் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாடாளுமன்றம் குறித்து எவ்வித மாயையும் எம்மிட

(8ஆம் பக்கம் பார்க்க)

## தவிர்க்க முடியாத நிலையில் சில நடவடிக்கைகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 27

வடக்கு. கிழக்கு மாகாண அரசைப் பாதுகாப்பதன் மூலமாகத்தான் எமது பிரதேசத்தையும் மக்களையும் நிரந்தரமாக பாதுகாக்க முடியும்.

எமது மக்கள் அமைதி, சமாதானம் நிறைந்த ஒரு ஜனநாயக சூழலில் நிரந்தரமாக வாழும் நிலையை உறுதிப்படுத்தும் பொருட்டு, தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் சில நடவடிக்கைகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்:

இதனால் பல்கலைக்கழக மாணவர்களுக்கோ, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கோ, அன்றி அரசசேவையில் உள்ளவர்களுக்கோ எந்தவித

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரு பஸ்கள் தீக்கிரை!

கொழும்பு ஆகஸ்ட் 27

ஆயுதம் தரித்த கோஷ்டியினர் அக்குரஸ்ஸ, கந்தர ஆகிய இடங்களில் இரண்டு பஸ்களை எரித்தனர்: (ஓ-எ)

**சுபநேரம்**
(27 - 8 - 1989)

ஆவணி—11ஞாயிற்றுக்கிழமை நக்ஷத்திரம்: திருவாதிரை சுபநேரம்:
09-05 முதல் 10-35 வரை ராகுகாலம்:
04-35 முதல் 06-05 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்:
ஏகாதசி விரதம்

## வேலைநிறுத்தம் பற்றிய வழிகாட்டல்கள் இவை

கொழும்பு, ஆக 27

நாளை ஆரம்பமாகும் ஒரு வாரகால வேலை நிறுத்தம் எப்படி கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமான வழிகாட்டல்களைத் ஜே. வி. பி. வெளியிட்டுள்ளது.

அவை வருமாறு:

★ வேலைக்குச் செல்லக் கூடாது.

★ வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்க வேண்டும்

★ தேசிய விடுதலைக்காக மரணித்த தியாகிகளின் நினைவாக வீடுகளில் சிவப்பு அல்லது வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட வேண்டும்.

★ மக்கள் வெளியே நடமாடக் கூடாது.

பிரேமதாசா - தொண்டா - ரஞ்சன் தலைமையிலான அரசு நடத்தும் இனப்படுகொலையைக் கண்டித்து இந்த தேசிய வேலைநிறுத்தத்திற்கு மக்கள் பூரண ஆதரவளிக்க வேண்டும் — என்றும் ஜே.வி.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ எ)

### முச்சந்தி முரளி




படையினர் பாடு எல்லாப் பக்கத்தாலையும் பெரிய திண்டாட்டம்தான் பாருங்கோ...!

## 'கைஸ்' உறுப்பினர் இருவர் திருமலையில் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 27

ஈரோஸ் இயக்கத்தின் மாணவ அமைப்பான மாணவர் இளைஞர் பொது மன்றத்தின் (கைஸின்) உறுப்பினர்கள் இருவர் நேற்றுக் காலை திருகோணமலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது:

பிரபா, சங்கர் ஆகியோரே உயிரிழந்த இருவரும் ஆவர்.

இச்சம்பவம் தொடர்பாக ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச்செயலாளர் வே. பாலகுமாரன் பத்திரிகைகளுக்கு நேற்று அனுப்பிய செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்திருப்பதாவது:-

திருகோணமலையில் உள்ள எமது மாணவர் இளைஞர் பொதுமன்ற அலுவலகம்

[8ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவுக்கு அப்பால் பஸ் சேவைகள் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஆக 27

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்றுமுதல் வவுனியாவுக்கு அப்பாலான பஸ் பஸ்சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தென்பகுதியில் ஜே வி. பியினர் ஒரு வார காலத்துக்கு வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதை அடுத்தே பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது: (ஓ-9)

உ

**திருமண அழைப்பிதழ்**

மணமகன்:
செல்வன் முருகேசு வர்ணராஜா

மணமகள்
செல்வி துரைச்சாமி சந்திரவதனி

காலம்:- 28. 08. 1989 திங்கட்கிழமை.
பகல் 12.05 மணிமுதல் 1.35 மணிவரை.

இடம்:- மணமகள் இல்லம், இந்துக் கல்லூரியடி, மாவிப்பாய்:

திருமதி. முருகேசு இராசம்மா, பிள்ளைகள், கோப்பாய் வடக்கு, கோப்பாய்:

திரு. திருமதி. செல்லையா துரைச்சாமி, வைத்தீஸ்வரன், சுந்தரலிங்கம், கிருபாமூர்த்தி, இந்துக்கல்லூரியடி, மாவிப்பாய்.

(1729)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

கண்ணாடி அலுமாரிகள், புடைவைக்கடை, மருந்துக் கடைக்கு உகந்தவை: 6 அடி உயரம், 5 அடி அகலம், கீழ்லாச்சி 2, 5½ அடி உயரம் 4½ அடி அகலம் 6, 7, 8 அடி 24 சேதிதகரம் 120 இயன விற்பனைக்குண்டு எந்நேரமும் சந்திக்கலாம். சி. கந்தசாமி நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி, மானிப்பாய். (1807)

ஐஸ்கிறீம் பொடியுடன் வெற்போட் வான் A - 55 கேம்பிறிச் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No: 33, ஆடியபாதம் றோட், நல்லூர் மார்கட், கல்வியங்காடு. (1820)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தாய் லுவ Golden Comet பிறவுண் Hyline கறுப்பு Christhombo புறொயிலர் குஞ்சுகள் பெற பதிவு செய்க. யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர்சங்கம்: சுன்னாகம் கிளை (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்), கே. கே.எஸ். வீதி, சுன்னாகம். (1813)

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

V. M. S. R Hen Farm பிறீமா கைலையின் பிலிமத் இனங்களை உடைய ஒருநாள் புறொயிலர் வெள்ளை கறுப்பு சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சகலஇறைச்சிக் கோழிகளும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யும் இடங்கள்: 86 பலாலி றோட், கந்தர்மடம், (இலுப்பையடி) துர்க்காதேவி கிளினிக் இருபாலைச் சந்தி, இருபாலை. (1810)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

விஞ்ஞானபீடப் பரீட்சைகள் 1989

1989ஆம் ஆண்டிற்குரிய முதலாவது ஈரை ஆண்டுப் பரீட்சை 09 - 10 - 1989 இல் நடைபெற உள்ளது.

பரீட்சைக்குவிண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 15 - 09 - 1989 இற்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ x10 செ.மீ. அளவுடைய கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

(சி/3572)



## தேவை

விற்பனையாளர்களே மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் உதயனில் விளம்பரப்படுத்திஞல் பெற்றுக் கொள்வோம். (1579)

சோப் செய்வதற்குரிய உபகரணங்கள் தேவைப் படுகின்றது. நேரிலோ அல்லது கடிதமூலமோ உரியவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். மினி ரேட் சென்ரர், இல. 3, J M. C. கட்டடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (1730)

## பெண் எழுதுவினைஞர் தேவை

தமிழ் ஆங்கிலம் தட்டச்சுப் பெண் எழுது வினைஞர் ஒருவர் தேவை. தகுதி திறமை உடையவர் சொந்தக் கையெழுத்தில் சான்றிதழ்களுடன் அஞ்சல் மூலம் 31-08-89 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். த. சோமசுந்தரம், 93/1.(257) மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (1731)

## மணமகன் தேவை

இந்துவேளாள B. Sc. விஞ்ஞான ஆசிரியைக்குச் செவ்வாய் குற்றமற்ற சைவபோசனமுள்ள B. Sc அல்லது வேறு பட்டப்படிப்புள்ள மணமகனைப் பெற்றோர் விரும்புகிறார்கள். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 583, C/o உதயன், யாழ்ப்பாணம். (1735)

## மணமகள் தேவை

வேளாள குல ஆசிரியர்கள் B. Sc 30 வயது, B. Sc 26 வயது, B. A. 38 வயது ஆசிரியர் விரும்புவது ஆசிரியை குருகுலம் இந்து B. Com ஆசிரியர் R. C. வேளாளர் குலம் B. Sc ஆசிரியர் விரும்புவது B. Sc ஆசிரியை ஆங்கில ஆசிரியர் விஸ்வகுலம் 30 வயது: தொடர்பு: A. B. C. D. E. விவாகப் பொருத்துனர்' 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (1739)

உயர் வேளாள இந்து குலமும் சகல நற்குணங்களையும் உடைய 33 வயது பிரபல தனியார் நிறுவன உரிமையாளருக்கு அதே இயல்புகளை உடைய மணமகள் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 581, C/o உதயன், யாழ்ப்பாணம். (1714)

## மணமகள் தேவை

இந்த உயர்வேளாளகுல B A பட்டதாரியும் கனடிய பிரசையும் கணக்காளருமாகிய 31 வயது நிரம்பிய உதயத்தில் செவ்வாய் அமைந்த மணமகனுக்கு 28 வயதிற்கு உட்பட்ட பொருத்தமான அழகிய பட்டதாரி மணப்பெண் உடன்தேவை. நேரடித் தொடர்பு: T. தியாகராசா 117/3 அரசடி வீதி, யாழ்ப்பாணம். (11749)

## மணமகள் தேவை

கொழும்பில் அரசாங்க உயர்பதவி வகிக்கும் 30 வயது மணமகனுக்கு கோவிய இந்து குலத்தைச் சேர்ந்த அழகான பண்பான படித்த மணமகள் தேவை. படம் குறிப்புப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். 578, C/o உதயன், யாழ்ப்பாணம். (1682)

## மணவாளன் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 25 வயது வர்த்தக நிர்வாகப்படிப்போடு விரைவில் அவுஸ்திரேலியா செல்லும் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (1589)

## மூக்குக் கண்ணாடிகள்

+ 1.00 முதல் +3.50 வரையிலான வெளிநாட்டு மூக்குக் கண்ணாடி வகைகளை (Reading Glass) குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள பென்ஸி ஹவுஸ், 68, பெரிய கடை, யாழ்ப்பாணம். (C/3557)

## சோதிட, மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்: 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும் மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (வியாழக் கிழமை விடுமுறை) (1701)

## MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road, Sillalai. (1058)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில டைப் பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

## பிரெஞ்சு மொழி வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி (Beginners Course) 2- 9- 89 சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகின்றது. தொடர்பு: Alliance Francaise De Jaffna யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம், 130, முதலாம் குறுக்குத் தெரு' யாழ்ப்பாணம். (1713)

## Matrimonial

Hindu vellala Brothes Seek A suitable Qualified partner Accountant, Engineer) for Their sister 22 years old (pretty) working in Canada. As a Canadian Citizen. 580, C/o Uthayan. (1706)

## WININN LADIES ACADEMY

1-9-89 முதல் மனையியல், சங்கீத வகுப்புக்கள் வழமை போல் நடைபெறும்- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (11750)

## தவறிவிட்டது

சத்தியதேவி பசுபதியாகிய எனது 716130576 V இலக்க அடையாள அட்டை 22.8.89 அன்று K. K. S. வீதியில் பன்றிகோட்டை பிள்ளையார் கோவிலுக்கும் சிவதொண்டன் நிலையத்துக்கும் இடையே தவறிவிட்டது. எடுத்தவர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். (1736)

வடிவேலு கதிர்காமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 480052340 V 24. 8. 89 குஞ்சுப்பரந்தனுக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் (1728)

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (30 8. 89) புதன்கிழமை குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே, பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு. (எங்கள் குஞ்சுகளுக்கு லைட் தேவை இல்லை. (1740)

## Spoken English

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 2. 9. 89 சனி, ஞாயிறு மட்டும். நேரம் 3 - 4½ p. m. தொடர்பு: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர். (1821)

## Wanted

Seeks Appointment as Book - Keeper London Qualified Posses wide Experience Working in Sri Lanka and Abroad Salary Negotiable No-75, MartynRoad, Jaffna. (1819)


# எழுத்தைப் படித்து விமர்சனம் செய்யவேண்டும்; ஆளைப்பார்த்தல்ல

## சிறுகதைகள் விமர்சனக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஆக.27

இப்போதெல்லாம் சிறுகதைகளை விமர்சனம் செய்வோர் அனேகமாக ஆளைப் பார்த்துத்தான் விமர்சிக்கிறார்கள் எழுதியவரை நேரில் தெரியாமல் அவரது கதைகளை எழுத்தைப் படித்து விமர்சனம் செய்யவேண்டும் அதுவே சரியான விமர்சனமாக அமையும்.

இவ்வாறு புலவர் ஈழத்துச் சிவானந்தன் கருத்து வெளியிட்டார்.

தமிழ் வாரப் பத்திரிகைகளில் கடந்த ஜூன் ஜூலை மாதங்களில் வெளியான சிறுகதைகள் பற்றிய விமர்சனக் கருத்தரங்கு, குருப்பசிட்டி சன்மார்க்க சபையில் அண்மையில் நடைபெற்றது. கலாகேசரி ஆ. தம்பித்துரை கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

அந்தக் கருத்தரங்கில் ''சஞ்சீவி'' யில் வெளியான சிறுகதைகள் குறித்து விமர்சன உரை ஆற்றுகையிலேயே புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'முரசொலி', 'திசை' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த கதைகள் குறித்து கலாநிதி சி. மௌனகுருவும், 'ஈழநாடு' 'தினகரன்' பத்திரிகைகளில் வெளி வந்த சிறுகதைகள் குறித்து திரு. பொ. கணேசமூர்த்தியும் விமர்சன உரை நிகழ்த்தினர்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒரு கருவை மையமாக வைத்து, பொருள் ஒழுங்கு மாறாமல், கருத்துப் பிசகாமல் படைக்கப்படுவது தான் சிறுகதை.

ஆரம்பத்தில் நல்லாகத் தொடங்கும் சிறுகதைகள் பின்னர் தொய்வு காணும் நிலை கூடாது.

ஒரே பிரச்சினையை மையமாகக் வைத்துப் பலரும் எழுதும் போக்கும் தவிர்க்கப்பட வேண்டும்— என்றார்.

கலாநிதி சி. மௌனகுரு தமது விமர்சன உரையில் குறிப்பிட்டதாவது.

ஒரு கதையை விமர்சனத்துக்கு எடுக்கும்போது, அது கலைப்படைப்பாக உயிரோட்டமாக உள்ளதா. அல்லது கட்டுரை வடிவில் உள்ளதா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும்.

எடுத்த கருவை உயிரோட்டமாகக் கையாண்டு, இறுதியில் கேள்விக் குறியுடன் முடியும் கதைகளே வாசகர் மனதில் இடம்பெறும்: விமர்சனத்துக்கும் ஏற்றனவாக அமையும்.

எமது சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகும் சிறுகதைகளில் பலவும் பொழுது போக்குக் கதைகளாகவே அமைகின்றன.

கதையைப் படித்து முடித்த பின்னர் இதுதானா கதை என்று வாசகர்கள் கேட்கும் அளவிலேயே அவை உள்ளன.

அவை விமர்சனத்துக்கு ஏற்ற சிறுகதைகள் அல்ல— என்றார்.

திரு. பொ. கணேசமூர்த்தி தெரிவித்ததாவது:-

படைப்பாளிகளும், விமர்சகர்களும் ஒரு பக்கம் சார்ந்த மோகிகளாக இல்லாமல், நடுவு நிலைமையான வாசகர்களாகவும், ரசிகர்களாகவும், இருப்பது அவசியம்.

பல சிறுகதைகளில் தேடுவதற்கு எதுவுமே இருப்பதில்லை. பல கதைகள் பழைய கருக்களையே இன்னமும் சுற்றி நிற்கின்றன. புதிய கருக்களுடன் கதைதான் படைக்கப்பட வேண்டும் கருக்கள் சரியான முறையில் கையாளப்படுதலும் அவசியம் என்றார்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நன்றி தெரிவித்துப் பேசினார். (அ-க)

# கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஆக, 27

பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு 292/2, நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுக்களில் ஏற்கனவே 94 அடையாளக் கார்ட்டுக்களின் விவரங்கள் வெளிவந்து விட்டன

இன்று மற்றும் ஒரு தொகை அடையாளக் கார்ட்டுகளின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது:

95. 416091226 V அன்னலட்சுமி துரைராஜா, யாழ்ப்பாணம்.
96. 651002400 V கிருஷ்ணமூர்த்தி கணேசலிங்கம், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
97. 598351090 V சுப்பிரமணியம் ஞானேஸ்வரி, புன்னாலைக்கட்டுவன்.
98. 352031534 V பாலசிங்கம் கந்தசாமி, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
99. 536022295 X சந்திரதவதேவி முருகேசு, உடுப்பிட்டி.
100. 623251071 V நடேசிவாயம் சந்திரகுமார், சின்ன இறுப்பிட்டி, புங்குடுதீவு மேற்கு.
101. 491102950 X மாணிக்கம் அப்புத்துரை, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.
102. 610343473 V ஆதம் வாவா முகம்மது றபீக், சாத்தான்குடி.
103. 693222524 V கந்தசாமி கேதீஸ்வரன், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
104. 526573676 V செல்வராணி அருணாசலம், 159/4, கோவில் வீதி, நல்லூர்.
105. 240150190 V வல்லிபுரம் செல்லையா, 10ஏ/913, கரணவாய் தெற்கு, வடமராட்சி தென்மேற்கு.
106. 401590323V வயிரவன் பரமன், கில்லாலை, பண்டத்தரிப்பு.
107. 337201555V சுகிர்தரத்தினம், பொன்னம்பலம், 995, உடுவில்.
108. 390201737V பேரம்பலம் வரதராஜா, விவேகானந்தா வீதி, கொழும்பு-6.
109. 632060483V வேலுப்பிள்ளைமோகன், கிழக்கு வீதி, வல்வெட்டித்துறை.
110. 680070938V அன்ரன் ராஜாசாரியர் ஜேசுதாசன், கீரிமலைவீதி, பண்டத்தரிப்பு.
111. 542373377V சுப்பையா கனகநாயகம், கற்குழி, சாவகச்சேரி, தெற்கு.
112. 553362954V சேகு அப்துல் கபூர், சோனக தெரு, புதிய சோனக தெரு, யாழ்ப்பாணம்.
113. 426460700V கமலவேணி சோமசேகரம், ஹிரிப்பிட்டி, அத்தனகல்ல.
114. 540992339X சுந்தரம் பாலசுப்பிரமணியம், நெல்லியடி.
115. 205510028V பூரணம் ராஜரத்தினம், அரியாலை மேற்கு.

(தொடரும்)

## சட்டவிரோதச் செயல்

அண்மையில் நெடுந்தீவில் இருந்து அனுமதியின்றி ஏற்றப்பட்ட மரங்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் இறக்கப்பட்டசமயம் கடமைக்காக நெடுந்தீவுக்கு வந்த பதில் உதவி அரசாங்க அதிபர் அதை அவதானித்ததை அடுத்து இந்தச் சட்டவிரோதமான செயலை முற்றாக நிறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். (ந-111)


மானிப்பாய் கோவில் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வெற்றுச் சாக்கு விற்பனை

சங்கத்திலுள்ள 5,500 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 30 - 08 - 89 புதன்கிழமை பி. ப. 2.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர். 25. 08. 89 (சி/3573)



தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்



நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

குழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு

**பொருள்:**

தம்குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.


# உதயன்

இல 893/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24603 / 22078
27 - 08 1989 ஒரு பெ இல: 80


## ஆயிரம் ரூபா நிவாரணம் படும்பாடு!

1987 அக்டோபர் இராணுவ நடவடிக்கைகளால், அனேகமாக, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் எல்லோருமே பாதிக்கப்பட்டனர்; மாவட்டம் அளாவிய ரீதியில், தாக்குதல்கள் நடைபெற்றதால் ஏதோ ஒரு கட்டத்தில் மக்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வேறு இடங்களில் அகதிகளாக இருக்க நேர்ந்தது;

இதனைக் கருத்திற் கொண்டு, குடாநாட்டு மக்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமாக, குடும்பத்துக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்க புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் யாழ். செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. இரண்டாயிரம் ரூபா நிவாரணப் பணத்தையும் இரண்டு கட்டங்களில் ஆயிரம் ஆயிரம் ரூபாவாக வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் முதற்கட்ட ஆயிரம் ரூபாவை வழங்குவதில் ஆரம்பத்திலேயே நீண்டகால தாமதம் ஏற்பட்டிருந்தது: அந்தத் தாமதத் தொடரில் பலருக்குப் பல மாதங்களுக்கு முன்னரே கிடைத்து விட்டது. ஆயினும் இன்னும் பலருக்கு இன்னமும் கிடைக்கவில்லை. பணம் ஒதுக்கப்பட்டவர்களில், பெயர் பதியப்பட்டவர்களில் பலர் தமக்கு இன்னமும் முதலாவது ஆயிரம் ரூபா கிடைக்கவில்லை என்று குறைப்படுகிறார்கள்; அவர்கள் முதலாவது ரகத்தினர்.

அவர்களைவிட, தமக்கு ஆயிரம் ரூபா நிவாரணமே கிடைப்பதற்கு உரிய எவ்வித ஏற்பாடும் இல்லை. அதிகாரிகளின் அசமந்தத்தால் தாம் விடுபட்டவர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள் என்று மேலும் பலர் முறைப்படுகிறார்கள்; அவர்கள் இரண்டாவது வகையினர்:

இரண்டாயிரம்ரூபா நிவாரணம் பெறத்தகுதிஇருந்தும் தம்மை அதிகாரிகள் புறக்கணித்துவிட்டார்கள். தகுதியில்லாதவர்களையும் நிவாரணம் பெறுவோர் பட்டியலில் சேர்த்தவர்கள், தகுதியுள்ள தம்மை ஒதுக்கிவிட்டார்கள் என்று மனம் வெதும்புவோரும் ஆயிரக்கணக்கில் உள்ளனர். அவர்கள் மூன்றுவது சாரார்.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தில் ஆயிரம் ரூபாவும் கிடைக்கவில்லையே என்று இந்த மூன்று சாராரும் மனம் புழுங்கிக் கொண்டிருக்கும் போது, இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபா நிவாரணத்தை வழங்கச் செயலகம் ஒழுங்குகளைச் செய்து வருகிறது: இது கேட்டு முன்சொன்ன முதலாவது, இரண்டாவது தரப்பினர்கள் மனம் வெதும்புகிறார்கள்; அந்த மனக் கொதிப்புகளின் பிரதிபலிப்பை உதயனுக்கு அவர்கள் எழுதி வரும் கடிதங்கள் மிக ஆழமாக உணர்த்துகின்றன.

இந்த மனக்கசப்புகளின் மத்தியில், பெயர்கள் பதிவு செய்யப்பட்டும் பண ஒதுக்கீடு கிடைக்காமல், நிவாரணம் கிடைக்காதோ என ஏங்கி இருந்த இரண்டாவது வகையினருக்குச் சிறிது அதிர்ஷ்டம் தலைகாட்டி உள்ளது. விடுபட்டவர்களுக்கு வழங்குவதற்கென மூன்றுகோடி அறுபது லட்சம் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கி இருக்கிறது:

எனவே, இரண்டாம்கட்ட ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு முன்னர் முதலாம் கட்ட ஆயிரம் ரூபாவைச் சம்பந்தப்பட்ட இரண்டு வகையினருக்கும் வழங்குவதே நியாயமானது; ஏற்கனவே நிவாரணப் பணத்தில் ஒரு பகுதியைப் பெற்றவர்களுக்கு மீண்டும் வழங்குவதைத் தவிர்த்து, இதுவரை எதுவுமே கிடைக்காமல் இருப்பவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதுவே சரி;

விடுபட்டவர்களுக்கு என இப்போது ஒதுக்கப்பட்ட பணத்தை வெறும் ஒதுக்கல் நிலையில் வைத்திருக்காது, அது மக்கள் கைக்குக் கிடைக்கக்கூடியதாக மாற்றுவதற்கு அதிகாரிகள் வேகத்துடன் செயலாற்ற வேண்டும்;

இராணுவத் தாக்குதல்கள் நடந்து இன்னும் ஒரு மாதத்தில் இரண்டு வருடங்கள் முடியப்போகின்றன: ஆனால் நிவாரணம் கிடைப்பதாக இல்லை; இரண்டாயிரம் ரூபா நிவாரணப் பணம், இரண்டு வருடங்களிலும் கிடைக்காத அளவுக்கு அரசாங்க அலுவலகங்கள் இங்கே இயங்குகின்றன;

பெயர் பதியப்பட்டவர்களுக்காவது முதலாவது கட்டநிவாரணத்தை விரைவில்வழங்கி முடிக்கவேண்டும். இரண்டாவது கட்டப் பணத்தையும் சாட்டுகள்காரணங்கள்காட்டாமல் விரைவில் வழங்கி முடிக்க யாழ். செயலகமும் வங்கிகளும் இணைந்து செயற்படவேண்டும்;

இனியும் காலதாமதம் செய்வது பொருத்தமாகாது; நிவாரணம் வழங்குதலுக்கு முன்னுரிமை வழங்கி, பணத்தைக் கொடுத்து முடித்துவிடவேண்டும்; இல்லையேல் வழங்காதிருந்தமையைக் காரணம் காட்டி, பாவிக்கப்படாத நிதியாக நிவாரணப் பணத்தை மத்திய அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள முனைந்தாலும் வியப்படைய ஒன்றுமில்லை.

ஏனைய மாவட்டங்களில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அது கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை உண்டாகாமல் பார்த்துக்கொள்ளும் முழுப் பொறுப்பும் உள்ளூர் அதிகாரிகளினதே:

## புனர்வாழ்வு நெறிப்படுத்தல் கூட்டம்

திருகோணமலை ஆக: 27

வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் கூட்டம் "எலிபன்ற் ஹவுஸ், மண்டபத்தில் இடம் பெற்றது;

மாகாண முதலமைச்சர் திரு. அ: வரதராஜப்பெருமாள் தலைமையில் மாநாடு நடைபெற்றது:

மாகாண நிதி அமைச்சர் திரு; பெ; கிருபாகரன் பிரதம செயலாளர் திரு. வி.என். சிவராசா, யாழ் மாவட்ட எம்; பி. திரு: ஆ; யோகசங்கரி ஆகியோரும்—

திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களும் மாகாண அரசின் செயலாளர்களும், உயர் அதிகாரிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்; (இ-150)

### துர்க்கை அம்மன் உற்சவ ஏற்பாடுகள்

காங்கேசன்துறை ஆக 25

செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உற்சவத்தை யொட்டிவழமை போல் ஏற்பாடுகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. இராசையா தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வழமை போன்று போக்குவரத்து, சுகாதார, பாதுகாப்பு ஒழுங்குகளை மேற் கொள்வதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது;

ஆலயத்துக்கு வருவோர் ஆசார சீலர்களாக வருவதுடன் நகைகள் அணிந்து வருவதைத்தவிர்க்க வேண்டுமெனவும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது: (க-68)

### நாய்கள்

முல்லைத்தீவு, ஆக. 27

முள்ளியவளைப் பகுதியில் நாய்கள் தினமும் சுட்டுக் கொல்லப்படுகின்றன.

வீட்டுக் காவலுக்கான நாய்கள் கொல்லப்படுவதை ஒட்டி மக்கள் கவலை அடைந்துள்ளனர்; (க-93)

யாழ் மாவட்டத்தில்

## பின்தங்கிய பிரதேச மக்களுக்கு சுய தொழில் வாய்ப்புக் கடன்

### உலர் வலய அபிவிருத்தி நிறுவனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக 27

யாழ் மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமக்கள் சுய தொழில் வாய்ப்புப் பெற கடன் வழங்கும் திட்டம் ஒன்றை உலர்வலய அபிவிருத்தி நிறுவனம் நடைமுறைப் படுத்தி வருகிறது:

யாழ் மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமக்களின் குறைபாடுகளை நேரில் அவதானித்து: அவர்கள் சுய தொழில் ஒன்றை ஆரம்பிக்க விவசாயம், கால்நடை, சுய முயற்சி ஆகியவற்றுக்கு இந்த அமைப்பு சுழற்சி முறையில் கடன் வழங்கி வருகிறது.

5000 ரூபா வரையில் இக் கடன் வழங்கப்படுவதாகவும் இதுவரை 200 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்:

இந்தஅமைப்பின் முகவர்களுக்காக பயிற்சிக்கருத்தரங்கும் நடத்தப்பட்டு வருகிறது: (இ - 3)

தமிழக அணு உலை:

## இலங்கை விஞ்ஞானி அபாய அறிவிப்பு

கொழும்பு, ஆக. 27

இந்திய அரசினால் தமிழ் நாட்டில் கூடங்குளத்தில் நிறுவப்பட்டுள்ள அணு மின் உலையில் கதிரியக்க ஆபத்து ஏற்பட்டால் அது இலங்கையை பெரிதும் பாதிக்கும்:

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக அணுத்துறை நிபுணர் டாக்டர் கிரான்வி தர்மவர்த்தன அபாய அறிவிப்புச் செய்துள்ளார்;

தமிழ்நாட்டு அணு மின் உலையில் வெடிப்போ, விபத்தோ, கசிவோ ஏற்பட்டால் அது இலங்கையை மோசமாக தாக்கும்; குறைந்த அளவு கதிரியக்கக் கசிவு ஏற்படின் பாதிப்பு சிறிதளவே இருக்கும்; பெரிய அளவில் இருக்குமானால் விளைவும் விபரீதமாகும்;

ஆயினும் ஒரு நாட்டின் அணு உலையை கட்டுப்படுத்தவோ, தடைபோடவோ பிறிதொரு நாட்டிற்கு முடியாது— என்று அவர் தெரிவித்தார். (அ-9)

### பெயர்ப்பலகைகள்

மட்டக்களப்பு ஆக. 27

சகல இ. போ. ச. பஸ் பெயர்ப்பலகைகளிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் இடம் பெறல் வேண்டும்.

இவ்வாறு போக்குவரத்து துறை இராஜாங்க அமைச்சர் திரு. எம்; எஸ். செல்லசாமி சகல பிராந்திய போக்குவரத்துச்சபைகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்: (க - 21)

## வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் எதுவும் இல்லை

வடமராட்சிச் சம்பவங்களை அடுத்து இடம்பெயர்ந்தவர்களுக்கு அரசின் நிவாரண உதவி எதுவும் கிடைக்கவில்லை:

இதுதொடர்பாக அவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது;

வடமராட்சியின் பல கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் தம் இடங்களை விட்டு வேறுதூரஇடங்களுக்கு இடம்பெயர்ந்து இனத்தவர்களுடனும்; நண்பர்களுடனும் தங்கி வாழ்கிறார்கள்.

அரசு சார்பற்ற அமைப்புகளால் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டாலும், நிரந்தரமாக பங்கீட்டுக் காட்டுமுறையில் உணவுப்பொருள்கள் வழங்க அரசசார்பில்திணைக்களங்கள் எதுவும் இதுவரை முயற்சிமேற்கொள்ளவில்லை என்று அவர்களில் பலர் உதயனிடம் கவலையுடன் தெரிவித்தனர்; (இ-3)

## லெபனானிலுள்ளஇலங்கையருக்கு உதவுமாறு கோரிக்கை

கரவெட்டி ஆக 27

லெபனானில் உள்ள ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் கடந்த சில மாதங்களாக தமது தாய்நாட்டுடன் தொடர்புகொள்ள முடியாத நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர் என அறிய வருகின்றது:

இதனை ஒட்டி லெபனானில் வாழும் இலங்கை மக்களின் நலன்புரிச் சங்கத்தின் இலங்கைக்கிளைத் தலைவர் திரு: ஆனந்த குமாரசாமி வெளிநாட்டு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்;

லெபனானில் வசிக்கும் இலங்கை மக்கள் தமது நாட்டுக்குத்திரும்பவோ அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லவோ துணைபுரியுமாறு இக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. [க- 70]

### றேட்டரிக் கழக உதவி

யாழ்ப்பாணம், ஆக: 27

அண்மையில் வல்வெட்டித்துறையில் ஏற்பட்ட சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக யாழ்: செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக ரூபா 7000 பெறுமதியான மருந்து வகைகளை யாழ்; றோட்டறிக்கழகம் கொடுத்து உதவியுள்ளது:

### வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

வவுனியாச் சந்தையில் வெங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு அந்தர் வெங்காயம் 275 ரூபாவாக விற்கப் படுகிறது: (க- 37)

## உள்ளூர் விதை உருளைக் கிழங்கு இந்த ஆண்டில் கிடைக்காது

### தனியாரே இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பர்

கொழும்பு ஆக: 27

இந்த ஆண்டு வடக்குக் கிழக்கில் பயன்படுத்துவதற்கு உள்ளூர் விதை உருளைக் கிழங்கும் வெளி நாடுகளில் இருந்து இலவச விதைக் கிழங்கும் கிடைக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது:

விதை உருளைக் கிழங்கை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு விவசாயத் திணைக்களம் தனியார் துறையுடன் ஒழுங்குகளைச் செய்துள்ளது,

விவசாயிகள் விதை கிழங்கு விநியோகஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்: என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### கொள் அளவு மோசடி

சேமமடு, ஆகஸ்ட் 27

வவுனியா மாவட்டப் ப; நோ; கூ; சங்கங்களில் புதுவிதமான ஊழல் ஒன்று நடைபெறுகிறது;

ஒரு போத்தலின் கொள் அளவு 800 மில்லி லீற்றர் என ரசீது கொடுத்துப் பணம்அறவிடப்படுகின்றது:

ஆனால் ஒரு போத்தலின் கொள் அளவு 750 மில்லி லீற்றரே என்று வவுனியா நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் திரு: வி: கிருஷ்ணதாசன் தெரிவித்தார்: (க-37)

### "சென்றிகள்"

முல்லைத்தீவு ஆக: 27

முல்லைத்தீவு கடைத்தெருவில் உள்ள ஆலடிச்சந்தியில் படையினர் சென்றிகளைப் போட்டுள்ளனர்:

இதனால் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது: ( -92

### பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஆக 27

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் சனசமூக நிலையப் பிரதிநிதிகளுக்கான கழக அபிவிருத்திப் பயிற்சிக் கருத்தரங்கு சம்மேளனப் பணிமனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும். [இ)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## வரந்தா முருகா!

ராகம்: சாருகேசி தாளம்: ஆதி

**பல்லவி**

வா முருகா வரந்தா முருகா
வாரணன் தம்பியே வள்ளி மணாளனே நீ!
(வாமுருகா)

**அனுபல்லவி**

ஞானமெல்லாம் புகழும் நல்லூர் பதிவாழும்
நாயகனே உமை பாலகனே - உவந்து
(வாமுருகா)

**சரணம்**

மூன்று தமிழுக்கும் முதல்வனே - முருகா
முக்கண்ணன் மைந்தனே முகுந்தனின் - மருகா
பக்தியோடுனை வந்து பாதம் பணியு மெந்தன்
பலவினை போக்கி உன்பதம் தருவாய் - ஐயா
(வா முருகா)

— வீ. கே. குமாரசாமி
(இன்று நல்லூரில் மாம்பழத் திருவிழா)

### சமய சந்நிதியில்

### மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக 27

வரெழு - பரத்துப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும். (க)

### முத்துஐயன்கட்டு முத்துவிநாயகர் மஹோற்சவம்

ஒட்டுசுட்டான், ஆக; 27

முத்துஐயன்கட்டு முத்துவிநாயகர் ஆலய அலங்கார மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை 10 தினங்கள் நடைபெறும்;

தினமும் பகல் அபிஷேக ஆராதனைகளும் இரவு விசேட பூசையும் நடைபெற்று விநாயகர் வீதிவலம் வருவார்; அதனைத் தொடர்ந்து இரவு விசேட கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்; (க-113)

### வாசகர் திருமுகம்

### கடமைக்கு வராத கிராம சேவையாளர்

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒரு பின்தங்கிய கிராமத்தின் கிராம சேவையாளர் கடந்த சில மாதங்களாகக் கடமைக்கு வருவதில்லை; இதனால் ஏழை மக்கள் நாலு ஐந்து மைல் தூரம் நடந்து வந்தும் பிரயோசனம் இல்லாமல் திரும்பிச் செல்கின்றனர். இரண்டு மூன்று நாட்களாக நடந்து திரிந்தும் கிராம சேவையாளரைக் காணமுடியவில்லை; இம் மக்களின் துன்பங்களைப் போக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

- செ. ராம்குமார்
கரவெட்டி.

### மீண்டும் பஸ்சேவையை ஆரம்பிக்க வேண்டும்

பருத்தித்துறையிலிருந்து மானிப்பாய்க்கும் பின் நவாலி வட்டுக்கோட்டைக்கும் பஸ் சேவை பல ஆண்டு காலமாக நடைபெற்றது: ஆனால் தற்போது பல மாதங்களாக இச்சேவை நடைபெறவில்லை.

இதனால் சுன்னாகம், மருதனாமடம் மானிப்பாய் செல்லும் மக்கள் அல்லலுறுகின்றனர்; கூடுதலான பணத்தையும் நேரத்தையும் செலவழித்து பஸ்கள் மாறிச் சுற்றி வளைத்துச்செல்ல வேண்டியுள்ளது. எனவே இச்சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்;

ஆகக்குறைந்தது சுன்னாகம் மட்டுமேனும் இச்சேவை நடைபெறவேண்டும். ஏனெனில் சுன்னாகச் சந்தை இருப்பது மட்டுமின்றி சுன்னாகத்தில் இருந்து மற்ற இடங்களுக்குப் பிரயாணம் செய்யக் கூடிய வசதிகளும் உண்டு. மானிப்பாய் வரை செல்லுமானால் மேலும் கூடிய பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கும்:

வே. கிருஷ்ணன்
அல்வாய்:

### தெருவிளக்குகள்

கோப்பாய் உப அபிவிருத்தி சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட தெருவிளக்குகள் யாவும் சுழற்சி மின்சாரம் வழங்கப்படும் போது வீணாக எரிகின்றன. இதை அணைத்துவிடின் மேலதிக மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும்;

க. விக்னு

### இல: 771 பேருந்து சேவை

யாழ்ப்பாணம் தொடக்கம் மருதனாமடம்வரை (இ. போ. ச பேருந்து சேவை) 771 பாதைப் பேருந்து தற்பொழுது சேவையில் இல்லை.

பொதுமக்களினதும் மாணவர்களினதும் பாதுகாப்புக் கருதி தயவுசெய்து ஒரு பேருந்துச் சேவையென்றாலும் ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்:

இ. சுந்தரம்
தாவடி.

### கண்டதும் கேட்டதும்

உலகில் நுளம்புத் தொல்லை இல்லாத நாடு கிடையாது; நுளம்புகள் பல நோய்களுக்குக் காரணமாகி இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் மலேரியா நோய்க்கு நுளம்புகளே மூலகாரணம்; அத்துடன் யானைக்கால் நோயையும் இவை பரப்புகின்றன.

உலகம் முழுவதும் மனிதனின் சத்துராதிகளாக வெகுவேகமாக நுளம்பு மாறி வருகிறது: ஆனால் இவற்றைப் பூண்டோடு அழிப்பதற்கு இதுவரை விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகள் உதவவில்லை. நுளம்பு ஒழிப்பில் சீனர் ஒருவரின் சாதனையை வாசித்துப் பாருங்கள்.

ஹூ சாங்பூ ஓர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்:

பீகிங் நகரின் கிழக்குப் பகுதியில் வசிக்கும் இவர் 1979ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 17. 5 கிலோகிராம் நுளம்புகளை அடித்துக் கொன்றிருக்கிறாராம்;

"இந்தக் கோடை காலத்தில் தினமும் சுமார் 4ஆயிரம் நுளம்புகளைக் கொன்றேன்; இவற்றின் எடை சுமார் நூறு கிராம்கள்" இப்படி இவர் சொல்கிறார்.

நுளம்புத் தொல்லையை நீக்குவதற்கு சீன அரசு ஊக்குவிப்புப் பணம் வழங்குகிறது

அதைப் பயன்படுத்தியே இவர் "நுளம்பு கொல்லும் பணி"யை ஆரம்பித்திருக்கிறார் போலும்!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவில்

# சேதமுற்ற வீடுகளை கட்டுவதற்கு பணம்

மாங்குளம், ஆக 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேதமடைந்தவீடுகளைப் புதுப்பிப்பதற்கானநடவடிக்கைகள் முல்லைத்தீவு அரசாங்க அதிபரால் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

துணுக்காய் பாண்டியன் குளம் உ: அ: அதிபர் பிரிவுகளில் சுமார் 300 வீடுகளை இம்மாத முடிவுக்குள் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு உ: அ. அதிபர் பிரிவில் 2500 வீடுகள் அடுத்த மாதத்தில் கட்டப்படவுள்ளன.

இவ் வீடுகளைக்கட்டுவதற்கு முன்னைப் போல் கட்டிடப் பொருள்களாக அல்லாது பணமே வழங்கப்படவுள்ளது.

ஒரு வீட்டுக்கு 15 ஆயிரம் ரூபா 4 தவணைகளில் வழங்கப்படும்.

மாங்குளம் மக்கள் வங்கியூடாக பணத்தை வழங்க நடவடிக்கைகளை துரிதமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. (இ-96)

## உதவி அமைச்சர் சம்பளம்

யாழ்ப்பாணம் ஆக 27

உதவி அமைச்சரொருவரின் மாதாந்த சம்பளம் ரூபா 12,500 என பொது நிர்வாக அமைச்சு செயலாளர் சகல அமைச்சுகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். அத்துடன் வாகன வசதியுடன் உபசரணை அலவன்ஸ் ரு. 1000 மேலதிக மாச வழங்கப்படும். (ச21)

மலிவு விலையில் அறிமுகம்!

CHILTON TRIP SWITCH

மின்பொறியியலில் புகழ் மிக்க OTTERMILL CHILTO L TD ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

சுந்தர்சன்

சந்தை முன் மானிப்பாய்

(C/8181)

WANTED

WANTED FOR A FIRM OF CHARTERED ACCOUNTANTS BASED IN JAFFNA

(1) Audit Trainees
(2) Accounts Trainees
(3) Tax Assistant
(4) Typist

Preferably with Accountancy Qualifications

Apply With Bio Data Before 2 nd September 1989.

(C/3560) No: 582, C/o UTHAYAN.

வெளிநாட்டுப் பயணம்

உடனடிப் பிரயாணம்

● கிறீக் கப்பல்கள் 2

| | | |
|---|---|---|
| B | 3+3 | வெற்றிடங்கள் |
| OILER | 3+3 | " |
| FRESHER | 5+5 | " |

முதலில் விண்ணப்பித்தவர்களும் PASS PORT & WAGES PAPER அல்லது C.D.C + 4 படங்களுடன் நேரில் வரவும்

● LIBYA (லிபியா)

25 வயதிற்குமேல்
Labourer — 10 ஆட்கள்
சம்பளம் 13,000 00
Passport + 6 படங்கள்

● சிங்கப்பூர் (SINGAPORE)

தாதிமார் (Nurse)

27 ஆம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்
★ PASSPORT & BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம்

நிரோஷன் என்ரபிறைசஸ்

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி, காங்கேசன்துறை.
(T.B. வைத்தியசாலை அருகில்)

(1703)

வடக்கு-கிழக்கில்

# கால்நடை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக 27

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கால்நடை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை (லிப்கோ) அமைக்க மாகாண காணி விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள மொத்த மாடுகளில் 28 சத வீதத்தையும் மொத்த ஆடுகளில் 49 சத வீதத்தையும் கொண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாய குடும்பங்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள்கூட்டுறவாகச் செயற்படாமல் இருப்பதால் பண்ணை வளர்ப்பில் துரித வளர்ச்சியை அடையமுடியாமல் இருக்கிறது.

இதனால் கால்நடை அபிவிருத்தியையும், கூட்டுறவு முறையையும் ஒருங்கிணைக்கும் நோக்குடன் கடந்த மாத இறுதியில் இருந்து கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இரண்டு முதல் ஐந்து வரையான கிராமங்களை ஒன்றிணைத்து 500 கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் (லிப்கோ) அமைக்கப்படுகிறது. அடுத்த மாத இறுதிக்குள் கூட்டுறவுச் சங்க அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக வடக்கு,கிழக்கின்எட்டுமாவட்டங்களிலும் மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்'' அமைக்கப்படுமென்றும் பின்னர் எட்டு மாவட்டங்களினதும் சங்கங்களிலிருந்து எட்டு பிரதிநிதிகளை தெரிவு செய்துவடக்கு கிழக்கு மாகாண கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் அமைக்கப்படவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட திரு: கணேசலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடம்

இப்பல்கலைக் கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவி

காவற் பொறுப்பாளர்/ சமையல்காரர் (தாழ்தரம்)

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 2385/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள்:

(அ) எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்:

(ஆ) தளபாடங்கள், மட்பாண்டத்தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும் சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்:

(இ) மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளைத் தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்:

(ஈ) பல்வேறு வகையான உணவுவகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களைப்பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த எண்ணிக்கையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் அளவு குறித்து பரிச்சயமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு:

பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும் நடைபெறும்.

குறிப்பு:

மேற்படி பதவிக்கான நியமனம் இருவருடங்களுக்கான கொந்துராத்து அடிப்படையில் வழங்கப்படும்:

இப்பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தாபனக்கிளையில் விண்ணப்பப்படிவங்களை நேரிலும் 23X10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை யொட்டப்பெற்ற கடித உறையை அனுப்புவதன் மூலமும் தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க திணைக்களங்கள். அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி, அவரின் நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்:

மேற்குறிப்பிட்டவாறு அனுப்பிப் பெறப்படாத விண்ணப்பங்கள், தெளிவாக/ விபரங்கள் குறிப்பிடாத விண்ணப்பங்கள், குறித்த திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்:

பதில் பதிவாளர்

யாழ்: பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்:

1989-08-23:

(சி/3553)

## வீடிழந்தோருக்கு சமையல் பாத்திரம்

கோப்பாய், ஆகஸ்ட் 27

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த கால அம்பாவிதங்களின் போது முற்றாக வீடுகளை இழந்தவர்களுக்கு சமையல் பாத்திரங்கள் வருகிற வாரம் விநியோகிக்கப்படவுள்ளன. (க-72)



அர்ச்சுன

கல்வி - முயற்சி - பெருவாழ்வு

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?

'அர்ச்சுன'

வாங்கிப் பரிசாக மாதந் தோறும் வழங்கவும்.

உங்கள் பகுதி உதயன் முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்

விலை ரூபா 4/- மட்டுமே.

ஆண்டுச் சந்தா ரூபா 55/-

தபாலில் பெற விரும்புவோர் இத்தொகைக்குக் காசுக்கட்டளை/ காசோலை பெற்று நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட் என்று எழுதி,

நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட் த. பெ. என் - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு:- கொழும்பில்:

எஸ். ஜி. சி. டீம்
61, நியு புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 4.

PERSONAL CLASS

கணக்கியல்:

ஆரம்பம்: 27 - 08 - 1989 Sun 2 30

89 — நிதிப்பாய்ச்சல்கூற்று
90 — பங்குடைமை
91 — கணக்குப் பதிவியல்

S. K. பிரபாகரன்

தொடர்பு-

NEW SCIENCE ACADEMY

B.M.C. LANE, JAFFNA.

(சி/3552)

வேலையாட்கள் தேவை

சோடாப் பெட்டி ஏற்றி இறக்க கூலி ஆட்கள் தேவை.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3566)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
26-03-1942

உதிர்வு:
06-09-1988

திதி: 27-08-1989

வேலுப்பிள்ளை புஸ்பநாயகம்

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ அத்தனையும் நிஜமாகும் வேளையில் உங்களை இழந்துவிட்டோமே அப்பா! டார்லிங் உங்கள் அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் ஏங்கி நின்றோமே அப்பா! எங்களைத் தவிக்கவிட்டு எங்கேதான் சென்றீர்கள்? இறைவன் தனது அர்ச்சனைக்குப் பூத்த புஸ்பம் என்று பறித்து விட்டாரோ?

உங்கள் ஆத்ம சாந்திக்காக எங்கள் கண்ணீர் பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் அன்பில் இரங்கும்
மனைவி, மகள்
உறவினர்கள்.

(1501)

45 ஆம்நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
24. 06. 1965

ஆண்டவன் அடியில்;
15. 07. 1989

அமரர்

செல்வன் கலாபரன் குமாரசாமி

பாசமுள்ள ''கலாபரனே'' எங்களைப் பாரினிலே
தவிக்க விட்டுச் சென்றதேனோ?
நேசமுடன் ''கலாபரன்'' என்று யாரை
நாம் அழைப்பது?
ஏங்கியே தவிக்கிறோம் — நாம் அழும் ஓசை
கூட உங்களுக்குக் கேட்கவில்லையா?
நீர் மறைந்து எத்தனை யுகமானாலும் உமது நினைவு
எம் நெஞ்சை விட்டு நீங்காது.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 27-8-89 (இன்று) ஞாயிற்றுக்கிழமை திருவையாற்றிலும் 28-8-89 திங்கள் கிழமை வீட்டுக் கிரியைகள் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்:

'வெண்ணிலா இல்லம்',
முரசுமோட்டை,
பரந்தன்.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்;

(1723)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியை மீண்டும் திறக்க நடவடிக்கைகள்

அம்பாறை, ஆக. 27

உயர்கல்வி அமைச்சின்கீழ் இயங்கும் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்தக் கல்லூரியின் கட்டடங்களில் சுமார் 200 அமைதிப்படை வீரர்கள் தங்கியிருப்பதாலும் டாங்கிகள் நிறுத்தப்பட்டிருப்பதாலும் மாணவ மாணவியர்கள் கல்லூரிக்கு வருகைதர அச்சம் தெரிவித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

எனினும் தற்காலிக ஏற்பாடுகள் மூலமாவது (வேறு பாடசாலைகளில் வைத்து) விரிவுரை வகுப்புக்களை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கல்லூரியை முதலாம் தரத் தொழில் நுட்பக் கல்லூரியாக மாற்றும் திட்டத்திற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 4.5 மில்லியன் யூ.எஸ் டொலர்களை ஏற்கனவே ஒதுக்கியிருந்தது. ஆனால் திட்டத்தை அமுல் நடத்த முனையும் தருவாயில் ஏற்பட்ட இனமோதல்கள், கலவரங்கள் காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டுத் திட்டம் தடைப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-14)

## சைவ சமய பாடப் பரீட்சை

கொழும்பு விவேகானந்தா சபையினரால் நடத்தப்படும் அகில இலங்கைச் சைவ சமய பாடப்பரீட்சை இவ்வருடம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நடத்தப்படும் என கொழும்பு விவேகானந்த சபை பரீட்சைச் செயலாளர் திரு. மு. கந்தசாமி அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் 3 ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் ஆண்டு வரை கல்விபயிலும் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும், பரீட்சை வினாக்கள் அரசாங்க பாடத்திட்டத்துக்கு அமைவாகவே தயாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் பற்றிய நாவன்மைப் போட்டிகள் நாட்டு நிலைமை அனுசரித்து கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (இ - 90)

## துரித வேகத்தில் நிவாரணம்

அம்பாறை, ஆகஸ்ட் 27

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் நிவாரண உதவிகள் வழங்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் விவசாயம், கடற்றொழில் இற வியாபாரம் முதலான தொழில்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா நாலாயிரம் ரூபா வீதம் நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணக் காசோலைகள் வழங்கப் பட்டு வருகின்றன. (க-14)

# மீண்டும் மின்சாரம் வழங்க மாகாண அரசு தலையிட வேண்டும்

## ஈழத் தொழிற்சங்கப் பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், ஆக 27

துண்டிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண மின் இணைப்பை மீண்டும் வழங்குவதில் இலங்கை அரசு நொண்டிச் சாட்டுக்களைக்கூறி வருகிறது. இப்பிரச்சினையில் வடக்கு-கிழக்கு மாகாண அரசு தலையிட்டு மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் ஈவினையிலுள்ள அஸ்பெஸ்டோஸ் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் திரு. எ. பி. ரகு மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாயில் உள்ள ஈழத் தொழிற்சங்க காரியாலயத்தில் திரு. ஆர். பிரதீப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்படி தொழிற்சாலையை சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

திரு. ரகு தொடர்ந்து பேசுகையில் 'தொழிலாளி வர்க்கத்தை முதலாளிகள் தொழில் ரீதியாகவும் சாதி, மத, இன பேதங்களின் அடிப்படையிலும் பிளவுபடுத்தி வைத்திருப்பதன் மூலம் எம் மத்தியில் ஐக்கியம் உருவாவதைத் தடுத்து தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களை பலவீனப்படுத்தி வருகின்றனர்.

இதனை நன்கு உணர்ந்து தொழிலாளி வர்க்கம் தம்மத்தியில் ஐக்கியத்தையும் ஒற்றுமையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## அம்பாறையில் சர்வோதயம்

அம்பாறை ஆகஸ்ட் 27

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் கிராமங்களில் சர்வோதய இயக்கத்தின் சேவைத்திட்டங்கள் தற்பொழுது கிரமமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஏற்கனவே அம்பாறையிலுள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தின் கீழ் இருந்து வந்த மேற்படி தமிழ் முஸ்லிம் கிராமங்கள் பிரிக்கப்பட்டு தற்பொழுது கல்முனை மத்திய நிலையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. (க-14)

## கவலை தெரிவிப்பு

வலிகாமம் வடக்குப் பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் செயற்குழு பாடசாலைகள் முழுமையாக இயங்காததை ஒட்டி ஆழ்ந்த கவலையைத் தெரிவித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன

**United Motors Lanka Limited**
**OFFER FOR SALE**

# யூனைட்டட் மோட்டேர்ஸ் லங்கா லிமிட்டெட்

## பங்குகள் விற்பனைக்கான அறிவிப்பு

ஒவ்வொன்றும் ரூபா 10-00 பெறுமதியான 9,000,000 சாதாரண பங்குகள் ரூபா 10-00 இற்கு வழங்கப்படுகின்றன.

விபரக் கொத்தையும் (Prospectus) விண்ணப்பப் படிவத்தையும் (Application Forms) இலவசமாக பின்வரும் நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1. இலங்கை வங்கி:-
யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி.

2. மக்கள் வங்கி:-
யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு.

3. பிஸ்னஸ் புரோமோட்டேர்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட்.
BUSINESS PROMOTORS (PVT) LTD.,
[Secretaries & Management Consultants]
2 ஆவது மாடி,
307/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மற்றும்

4. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தைச் சேர்ந்த தரகர்கள்.

- யூனைட்டட் மோட்டேர்ஸ் லங்கா லிமிட்டெட் -

(பி-3177)

ஷப்ருவின் → புதிர்ப் போட்டி

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
"ஷப்ரு" நிதி நிறுவனத்தால் நடத்தப்படும்
புதிர்ப்போட்டி

★ கவர்ச்சிகரமான பரிசில்கள் ★

முதலாம் பரிசு:- தங்க மோதிரம்
இரண்டாம் பரிசு:- பட்டுச்சேலை / பட்டுவேட்டி
மூன்றாம் பரிசு:- வெள்ளிப் பாத்திரங்கள்

★ மற்றும் 25 ஆறுதல் பரிசில்கள் ★

- மேற்குறிப்பிட்ட பரிசில்களைப் பெற நீங்கள் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதி இதற்கெனக் கோவில் வீதிகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடவும்.
- ஷப்ரு நிதி நிறுவன ஊழியர்களோ அல்லது உதயன் பத்திரிகை நிறுவன ஊழியர்களோ அவர்களது குடும்பத்தாரோ இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது.
- நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

போட்டி முடிவுத் திகதி:- 31-08-1989

நம்பிக்கை, நாணயத்தின் சின்னம்
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு — 4,
தொ. பே: 589310, 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்;
தொ. பேசி: 22073, 24805

1. 'ஷப்ரு' ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது எத்தனை ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளன?
......................................................
2. ஷப்ருவில் ஒருவர் மாதம் ரூபா 60/- வட்டி பெற வைப்பில் இடவேண்டிய அதி குறைந்த தொகை எவ்வளவு?
......................................................
3. ஷப்ருவினால் புதிதாக அமைக்கப்படும் கட்டிடம் எங்கு எவ்விடத்தில் கட்டப்படுகிறது?
......................................................
4. நிலையான வைப்புத்திட்டத்தில் 3 வருடங்களுக்கு ரூபா 6000/- மாத வட்டியில் இட்டு, அவ்வட்டியை மாதாந்த சேமிப்புத் திட்டத்தில் இடுவீர்களாயின் அக்கால முடிவில் நீங்கள் பெறும் முழுத்தொகையின் வருடாந்த வட்டி வீதம் எவ்வளவு?
......................................................
5. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்த மன்னர் யார்?
......................................................
6. நல்லூர் ஆலயச்சித்திரத்தேர் எந்த ஆண்டு முதன்முதலாக இழுக்கப்பட்டது?
......................................................

பெயர்:- ......................................
முகவரி:- ......................................
......................................

......................................
கையொப்பம்

விடைகள் போடுவதற்கு நல்லூரில் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்:-

(1) நல்லை ஆதீனம்
(2) வடக்கு வீதி கம்பன் தமிழ்க் கோட்டம்
(3) தெற்கு வீதி பாலமுருகன் டிரேடர்ஸ்
(4) யாழ். லியோ கழகம்

(பி-8240)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் ஆசிரியர் தெரிவின் போது தொண்டருக்கு நிரந்தர நியமனம்

## மகஜர் மூலம் கோரிக்கை

அம்பாறை, ஆக. 27

''பயிலுநர் ஆசிரியர் தெரிவின் போது தொண்டர் ஆசிரியர்கள் சகலருக்கும் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்க வேண்டும்''.

நிந்தவூர் தொண்டர் ஆசிரியர் சங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக சங்கம் ஜனாதிபதி, கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது!

கல்முனை கல்வி மாவட்டத்தில் சுமார் 600க்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் எவ்வித ஊதியமும் பெருமல் கடமையாற்றி வருகின்றனர்.

ஐந்து வருட காலமாக சேவையாற்றிவரும் இவர்கள் பிராந்திய கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்றே தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை ஆற்றுகின்றனர்.

க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த நாம் பாடசாலைகளில் நிலவிய ஆசிரிய பற்றாக்குறையால் ஏற்பட்ட பாதிப்பை எமது அயராத சேவைகளால் நிவர்த்தி செய்தோம்.

எனவே தற்பொழுது வழங்கப்படவிருக்கும் 25 000 பயிலுநர் ஆசிரியர் நியமனத்தின் போது தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கி சகலருக்கும் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்க அரசு முன்வர வேண்டும். — இவ்வாறு மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(க-14)

மகளிர் முகம்

## முதலாவது இடம்



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1988 ஆம் ஆண்டு நடத்திய அமைப்பாளர்களுக்கிடையிலான போட்டியில் திரு சரவணமுத்து சண்முகராஜா வட மாகாணத்தில் முதலாவது பரிசைப் பெற்றார்.

இவர் 1964 தொடக்கம் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியினதும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியினதும் பழைய மாணவராவார். (க)

## இஸ்லாமிய மகளிர் மன்றம்

யாழ்ப்பாணம், ஆக. 27

அண்மையில் யாழ். பெரிய கடை யும்மா மொஸ்க்லேனில் நடைபெற்ற இஸ்லாமிய மகளிர் மன்றக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி - T. சரிபா, உப-தலைவி - H. சனூஜா, செயலாளர் - M. சாஹிரா, உப செயலாளர் - ஹாஜியாணி S. குறைஷி, பொருளாளர் - T. பயக்கூன், நிர்வாகக்குழு U.K. சபீதா, S. சதிக்கா, M. றய்ஹான், M. நிதார் ஆகியோர் (க)

## புதுக்குடியிருப்பு இளைஞர் கழக நிர்வாகிகள்

புதுக்குடியிருப்பு, ஆக. 27

புதுக்குடியிருப்பில் ''நியூ பிறைற்'' என்ற பெயரில் இளைஞர் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் நடப்பு ஆண்டுத் தலைவராக திரு. சி. தவசீலன் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன், இணைச்செயலாளர்களாக திரு. க. பார்த்தீபன், இ. திலகேஸ்வரன் ஆகியோரும் பொருளாளராக திரு க. தர்மலிங்கமும் பத்திரிகைகள், கலாசார பொறுப்பாளர்களாக திரு. ந ரவீந்திரகுமாரன், திரு. ச. யோகராசா, திரு. சி. ஏகாம்பரம் செல்வி த. இந்திரா ஆகியோரும் விளையாட்டுப் பொறுப்பாளர்களாக திரு. மு. நாகேஸ்வரலிங்கம், திரு. ந ஜெயராசா, நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. கு. சபாரத்தினம், திரு. சி. விக்னேஸ்வரன், திரு. ச. கணேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(க-126)

# வீடுகளைத் திருத்த மானியம்- கடனுதவி

## புனர்வாழ்வு அமைச்சு வழங்கும்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 27

கடந்த கால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்தவும், புனர்நிர்மாணம் செய்யவும் மானியமும், கடன் உதவிகளும் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட உள்ளன.

மூன்று வகைகளாக வழங்கப்படவுள்ள இவ்வுதவித் திட்டம் விரைவில் அமுல் செய்யப்படலாம் என அறியப்படுகிறது.

அதன் முன்னோடியாக திட்டம் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய சுற்று நிருபம் ஒன்று யாழ் அரசாங்கச் செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

இத்திட்டம் பற்றிய விவரம் வருமாறு:-

★ 700 ரூபாவுக்கு கீழ் மாத வருமானம் பெறும் ஒரு குடும்பத்துக்கு 15 ஆயிரம் ரூபா மானியம் வழங்கப்படும். இம் மானியம் உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சின் பேரில் அரசாங்கச் செயலகத்தால் வழங்கப்படும்.

★ 701—1500 ரூபா வரை மாத வருமானம் உள்ள குடும்பத்துக்கு 15 ஆயிரம் ரூபா மானியமும், 15 ஆயிரம் ரூபா வீடமைப்பு அதிகாரசபைக் கடனாகவும் வழங்கப்படும். 15 ஆயிரம் ரூபா மானியத்தை உதவி அரசாங்க அதிபர் சிபார்சில் அரசாங்கச் செயலகம் வழங்கும். கடனை வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாவை ஆறு சதவீத வட்டியுடன் 15 வருட காலத்தில் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்தவேண்டும். இக் கடனுக்கு இருவர் பிணையாளராக இருக்கவேண்டும்.

★ 1501—2500 ரூபா வருமானம் பெறுபவர்கள், 15 ஆயிரம் ரூபாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரையில் வங்கிகள் மூலமாக கடன் பெறலாம். ஆறுசதவீத வட்டியுடன் 15 வருட காலத்துள் மீளக் கடன் தவணை அடிப்படையில் செலுத்தவேண்டும். (அ-3)

## வேண்டுகோள்

நெடுந்தீவு, ஆக. 27

செப்டம்பர் மாதத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ள நெடுந்தீவு பிரதேசசபையின் பிரதம எழுதுநர் திரு. நா. சோதிலிங்கத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(க- 111)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. அவுருன் தம்பிராசா

தோற்றம்: 10- 03- 1924  மறைவு: 27- 08- 1987

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஈராண்டு கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலாதிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

72/31, இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம்.

(1818)

## நன்றி நவிலல்

சென்ற 21-08 89 திங்கட்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு எமது அழைப்பை ஏற்று வருகைதந்து ஆசீர்வதித்தோர், அன்பளிப்பு வழங்கியோர், மற்றும் வாழ்த்து மடல் அனுப்பியோர்க்கும் எமது திருமணம் சிறப்பாக நடைபெற எல்லா வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மேலும் மண்டபத்தை எமக்கு வழங்கிய வித்தியாவிருத்திச் சங்கத்தினர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

திரு. வி. பாலகுமார்
திருமதி துளசி பாலகுமார்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

''ஐங்கரன் வாசா''
கட்டுடை,
மானிப்பாய்.

(1733)


## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

குவைத் — மற்றும் மத்தியகிழக்கு நாடுகள்

★ பணிப் பெண்கள்
★ ரிங்கர்ஸ்
★ மெக்கானிக்ஸ் (பெற்றோல்)
★ பெயின்டர்ஸ் (கார்)
★ கிளீனேர்ஸ்

[அத்துடன் குவைத்துக்கு குறைந்த கட்டணம் செலுத்திச் செல்லும் வேலை வாய்ப்புண்டு]

தொடர்பு கொள்க:

மியுனிஸ்ட் என்ரபிறைசஸ்

156, 1ஆம், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
[வேம்படி மகளிர் பாடசாலை முன்]

[கி-8571]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் ஆறுமுகம் சரவணமுத்து
(Retd: Communication Supervisor)

தோற்றம்: 21 — 06 — 1912  மறைவு: 29 — 07 — 1989

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவனே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் சென்றாலும் இன்றும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாக காட்சி தருகின்றீர்கள். உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (28-08-89) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பான மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

[illegible],
[illegible]

(1717)

## மின்தடைக்கு மத்தியிலும்:

# 40 சதவீத தொழிற்சாலை இயங்குகின்றன

மின்தடையால் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் 40 சதவீதமான தொழிற்சாலைகள் ஜெனரேட்டர் நீர் இறைக்கும் இயந்திரம், லான்ட் மாஸ்டர் இயந்திரம் ஆகியன மூலமாக இயக்கப்படுவதாக தொழிற் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்தடை தொடர்வால் தம் தொழிலகங்களை மூடி வைக்காமல் திறந்து தொழில் செய்யும் நோக்குடன் பல முதலாளிமார் ஜெனரேட்டர்கள் வாங்க கொழும்பு சென்றுள்ளனர். என்று அறியவந்தது.

ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தொழில் அதிபர்கள் இணைந்து கூட்டாக ஜெனரேட்டர்களை வாங்குவதன் மூலம் ஒவ்வொரு முதலாளிக்கும் குறைந்த செலவே ஏற்படும் என்றும் தொழில் இலாகாவின் அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.

(இ-3)

## சுகாதார உதவியாளராக [HEALTH VISITOR] பயிலுநர்கள் தெரிவு 1989

சுகாதார உதவியாளராக (Health Visitor) பயிற்சி அளிப்பதற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும். பயிற்சியின் பின் இவர்கள் சில சுகாதார பணிகளை மேற்கொள்ள பணிக்கப்படுவர். இப்பதவிகள் தற்காலிகமானவை. நிரந்தரப்பதவிகளுக்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள். மாதாந்தம் ரூபா 2000/ அலவன்சாக செலுத்தப்படும். வேறுபடிகள் செலுத்தப்படமாட்டாது.

தகைமைகள்:-

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை - 18 வருடம் - 40 வருடம்.
3. கல்வித் தகைமை:-
   1. கல்விப் பொதுத்தராதரப்பரீட்சையில்(பழையது) 6 பாடங்களில் சித்தி. (இரண்டு தடவைகளில் இவற்றுள் கணிதம்/ தூயகணிதம், தாய்மொழி/ தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் அத்துடன் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் ஆகியபாடங்களில் ஏதாவதுஇரண்டில்திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்
   2. க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுடன் கணிதம், தாய்மொழி அல்லது இலக்கியம் விஞ்ஞானம், பிறிதொரு பாடத் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.
   3. தேசிய பொது கல்வித் தராதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி/ இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் /பிறிதொரு பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   கல்விப் பொது உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றோருக்கு அல்லது அதற்கு கூடிய பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   வன்னித் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற் குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை விபரங்களுடன் தயாரித்து எனக்கு 12- 09- 89க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

டாக்டர் க. மாணிக்கம்,
பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்,
வவுனியா, பிராந்தியம்,

(சி/3248)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சிவக்கொழுந்து தெட்சணாமூர்த்தி
(நல்லூர் கிராமசபை, இளைப்பாறிய மின் உத்தியோகத்தர்)

பிறப்பு: 09 - 08 - 1921  இறப்பு: 28 - 07 - 1989

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தந்தையே! எமக்கு நல்வழி காட்டி அன்பு, அறநெறி, பண்பு, பாசத்துடன் வளர்த்த தெய்வமே! எங்களைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு இறைவனாய் இணைந்து விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அருமை மனைவி, மக்கள், மருமக்கள்.

45/14, நாயன்மார் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

[1818]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல் கத்தாவிற்கு வயது முந்நூறு

கல்கத்தா ஆக. 26

இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்ருன கல்கத்தாவிற்கு கடந்த வியாழனுடன 300 வயது பூர்த்தியாகியது.

1690 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஏஜன்ட் ஜொப் சார்னெக் என்பவர் தனிமையான சுட்டானுட்டி என்னும் கிராமத்தில் வந்து இறங்கினுர். அருகில் உள்ள கொலிகட்டா, சோசிந்தபூர் ஆகிய கிராமங்களையும் சேர்த்து கல்கத்தா நகரை அவர் உருவாக்கினுர் அப்போது சார்னெக்குக்கு வயது 20.

ஹெளராபாலம் போன்ற கேக் ஒன்றைச் செய்து அதில் 300 மெழுகுவர்த்திகளை எரிவைத்து 'கல்கத்தா' வின் பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டது (எ)

## ஷாஓவின் தலைவிதி அக். தெரியும்

சீனக்கம்யூனிஸ்ட் தலைவர் ஷாஓ சியாங் கின் இறுதித் தலைவிதி வருகிற அக்டோபர் மாதத்தில் தீர்மானிக்கப்படவிருப்பதாக சீன பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வருகிற அக்டோபரில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 5வது பேராளர் மாநாடு நடைபெறும்; அப்போது ஷாஓவின் பிரச்சினைபற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

● பொதுத் தேர்தலுக்கு முன்னேடியாக ஆகஸ்ட் 30 இல்

# பலப்பரீட்சையாக அமையப்போகும் 'பாரதபந்த்' முறியடிப்பதில் ராஜீவ் காந்தி அரசு தீவிரம்!

## எதிர்க் கட்சிப் பிரமுகர்களை முன்கூட்டியே கைது செய்ய ஆலோசனை

புதுடில்லி ஆக; 24

ராஜீவ்காந்தி பதவி விலகக் கோரி இம்மாதம் 30 ஆம் திகதி இந்தியா முழுவதிலும் 'பந்த்' ஒன்றை நடத்த எதிர்



வி பி சிங்

கட்சிகள் அனைத்தும் அழைப்பு விடுத்துள்ளது. தெரிந்ததே!

இந்த வேலைநிறுத்தத்துக்கு 'பாரதபந்த்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இப்'பந்த்'தை முறியடிக்க அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் அனைவரும் இரண்டு தினங்களுக்கு முதல் கடமைபுரியும் அலுவலகங்களுக்கு வந்து சேர்ந்து விட வேண்டும்! அல்லது அருகில் உள்ள உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் இப்படி மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

அரசு ஊழியர்கள் எடுத்துள்ள விடுமுறைகள் எல்லாம் ரத்துச்செய்யப்பட்டு விட்டன

இதனிடையில் - எதிர்க்கட்சிகளின் இரண்டாம் வரிசைத் தலைவர்களையும் எதிர்க்கட்சித் தொழிற் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களையும் கைது செய்வது குறித்து மத்திய உள் துறை அமைச்சு தீவிரமாக ஆலோசனை செய்து வருவதாகவும் புதுடில்லி அரச தட்டாரங்கள் தெரிவித்தன.



ராஜீவ்

வருட இறுதியில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னேடியாக ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸும் பிரதான தேசிய எதிர்க்கட்சிகளும் பிராந்தியக் கட்சிகளான தி.மு.க அஸாம் கண பரிஷத் ஆகியனவும் சேர்ந்து நடத்தும் பலப்பரீட்சையாக இப் 'பந்த்' அரசியல் அவதானிகளால் கணிக்கப்பட்டுள்ளது. (எ)

### ஆந்திரத்துக்கும் ஆபத்து

ஆந்திர மாநில அரசைக் கலைத்து ஆளுநர் ஆட்சியை விரைவில் பிரதமர் ராஜீவ் காந்தி கொண்டு வர இருக்கிருர்.

சிவசேனைத் தலைவர் பால் தக்கரே வார்த வில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னுர். (எ)

### விமானக் கடத்தல்

அல்ஜியர்ஸ் ஆக. 26

கடந்த புதன்கிழமை 102 பயணிகளுடன் பிரெஞ்சு விமானம் ஒன்றை அல்ஜீரிய இளைஞர் ஒருவர் கடத்தியதும் பின்னர் அவர் சரணடைந்ததும் தெரிந்ததே.

பென் தாதா என்ற அந்த இளைஞர் சவர்க்காரக்கட்டி ஒன்றைக் காட்டியே விமானத்தைக் கடத்திஞர் என்று இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

## சீனப்பெருஞ் சுவரை உடைத்து ஊர்மக்கள் வீடு கட்டுகிருர்கள்

பீகிங், ஆக 26

உலக அதிசயங்களில் ஒன்ருன சீனப்பெருஞ்சுவரில் முப்பது கிலோ மீற்றர் நீளத்தை விஷமிகள் உடைத்து சேதப்படுத்தினர் என்று சீனுவின் ''டெய்லி'' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

மங்கோலியாவின் எல்லைப்புறப் பகுதியில் வசிப்பவர்கள் வீடுகட்டுவதற்குத் தேவையான கற்களை எடுப்பதற்காக பெருஞ் சுவரை இடித்தனர் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான சீனப்பெருஞ்சுவர் 1368 — 1644 இக்கு இடைப்பட்ட காலத்தில மிங் ராஜவம்சம் ஆட்சியில் இருந்த காலத்தில் கட்டப்பட்டதாகும்.

நன்கு பாதுகாக்கப்பட்ட கோபுரங்களும் சேதமாக்கப்பட்டன என்று அப்பத்திரிகை தெரிவித்தது. (எ)

## ஈரானுடன் ராஜீய உறவு கொள்ளபிரிட்டன் நிபந்தனை

லண்டன், ஆக. 26

எழுத்தாளர் சல்மன் ருஷ்டி மீது மறைந்த ஆயதுல்லா கொமேனி விதித்த மரண தண்டனை ரத்துச் செய்யப்படும் வரை ஈரானுடனை ராஜதந்திர உறவை மீண்டும் ஆரம்பிக்கப் போவது இல்லை என்று பிரிட்டன் அறிவித்துவிட்டது.

ருஷ்டி விவகாரம் தொடர்பாக பிரிட்டன் ஈரானுடனை ராஜதந்திர உறவை கடந்த மார்ச் மாதம் துண்டித்துக் கொண்டது தெரிந்ததே.

'சாத்தானின் கவிதைகள்' நூல் இஸ்லாத்தை நிந்திப்பதாக இருப்பதாகக் கூறி அதனை எழுதிய சல்மன் ருஷ்டி மீது கொமேனி மரண தண்டனை விதித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

### ஹொங்கொங்கில் சவுக்கடி ரத்து

ஹொங்கொங், ஆக. 26

சவுக்கடித் தண்டனை வழங்கும் நடைமுறையை ஹொங்கொங் அரசு கடந்த புதன் கிழமை தொடக்கம் ரத்துச் செய்துவிட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் ஹொங்கொங் தீவில் சவுக்கடித் தண்டனை பரவலாக அமுல் நடத்தப்பட்டு வந்தது.

1952இல் 476 பேருக்கு சவுக்கடி தண்டனை வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை இரண்டுபேருக்கு மட்டுமே ஹொங்கொங் சவுக்கடித் தண்டனையை வழங்கியது. (எ)

### சிங்கப்பூர் மீளாய்வு

சிங்கப்பூர், ஆக 26

அமெரிக்கத்தளம் அமைய இடமளிப்பது என்ற முடிவை மீளாய்வு செய்யத் தயாராக இருப்பதாக சிங்கப்பூர்த்துணைப் பிரதமர் தெரிவித்தார் (எ)

● போபோர்ஸ் பேர ஊழல்:

## ராஜீவ் ராஜினுமாச் செய்ய முன்வந்தது தடுக்கப்பட்டது!

போபேர்ஸ் பேர ஊழல் தலைமைக் கணக்கு அதிகாரியின் அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் பதவியை ராஜினுமாச் செய்து நாடாளுமன்றத்தை உடனே கலைத்து பொதுத் தேர்தல நடத்தராஜிவ்காந்தி முன்வந்தார்.

ஆனும் அமைச்சர்கள் சிலர் தடுத்து விட்டனர் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

தலைமைக் கணக்கு அதிகாரியின் அறிக்கை நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க் கட்சி எம்பிக்கள் லோக சபையில் கேள்வி எழுப்பினர்.

அச் சமயங்களில் பிரதமர் ராஜீவ் சபைக்கு சமூகமளிக்காது இருந்து வந்தார்.

எங்கே ராஜீவ் என்று எதிர்க் கட்சி எம் பிக்கள் அப்போது கேட்டனர்.

இறுதியில் எதிர்க்கட்சிகள் கூட்டாக ராஜினுமாச் செய்து விடுவது என்ற முடிவு எடுத்தனர்.

அன்றுதான் பிரதமர்ராஜீவ் சபைக்குச் சென்ருர்.

இதற்கு இடைப்பட்ட தினங்களில் நாடாளுமன்றத்தைக்கலைத்து திடீர் பொதுத் தேர்தலை நடத்துவது பிரதமர் முடிவு செய்திருந்தார் என்றும் பின்னர் சில சிரேஷ்ட எம்பிக்களின் வற்புறுத்தல் காரணமாக அந்த எண்ணத்தைக் கைவிட்டு நாடாளுமன்றத்திற்கு சென்ருர் என்றும் 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஒப் இன்டியா' பத்திரிகை தெரிவித்துள்ளது.

### அனுமதி

வெளிநாடுகளில் உள்ள உதவி செய்யும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் விஸா பெற்று ஆப்கனுக்குவிஜயம் செய்யலாம் என்று அதிபர்நாஜிபுல்லா நேற்று அறிவித்தார்.

★ நடிகை சரோஜாதேவியிடம் திருட்டு

## கைதாவதைத் தவிர்க்க குட்டி பத்மினிக்குமுன்பிணை!

சென்னை ஆ. 26

பழம்பெரும் தமிழ் நடிகை சரோஜாதேவியிடம் நகை. பணம் களவுபோனதுதொடர்பாக நடிகை குட்டி பத்மினியைச் சென்னை மேல் நீதிமன்றம் நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்தது.

பொலிஸ் அழைக்கும்போது விசாரணைக்கு வரவேண்டும் என்பதே குட்டி பத்மினிக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை ஆகும்.

1988 நவம்பரில் நடிகை சரோஜாதேவி மைலாப்பூர் ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்தார் அப்போது அவரை குட்டிபத்மினி அவரது தாய் ராதாபாய் ஆகியோர் சென்று பார்த்து விட்டுத் திரும்பினர்

அதன் பின்னர் சரோஜா தேவி கோயிலுக்குச் சென்று விட்டு திரும்பி வந்து பார்த்த போது நகை, பணம் அனைத்தும் திருட்டுப்போனது தெரிய வந்தது.

சரோஜாதேவி செய்த புகாரைத் தொடர்ந்து பொலிஸார்குட்டிபத்மினியைகடந்த வாரம் விசாரித்தனர்.

பொலிஸார் தன்னைக்கைது செய்தால் உடனடியாக விடுவிக்க வகை செய்யும் முன் பிணை கோரி குட்டிபத்மினி மேல்நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருந்தார். அதைத்தொடர்ந்தே அவருக்கு முன்பிணை வழங்கப்பட்டது. (எ)

## 'செல்வந்த நாடு' போட்டியில் ஜப்பானுக்கு முதலிடம்!

டோக்கியோ, ஆ 26

1987 ஆம் ஆண்டு முடிவில் உலகின் மிகப் பெரிய செல்வந்த நாடாக ஜப்பான் விளங்கியது.

முதன் முறையாக அமெரிக்கா இரண்டாவது இடத்தைப் பெற்றது.

ஜப்பானின் தேசியச் சொத்துக்களின் பெறுமதி 1987 இல் 1 லட்சத்து 29 ஆயிரம் கோடி அமெரிக்க டாலராக இருந்தது என்று ஜப்பான் பொருளாதார திட்டமிடல் ஏஜன்ஸி அறிவித்தது.

1987 இல் அமெரிக்காவின் தேசியச் சொத்துக்களின் பெறுமதி ஒரு லட்சத்து 800 கோடி அமெரிக்க டாலராக இருந்தது.

''இக்கணிப்பின் மூலம், தொழில் வளர்ச்சியில் மட்டுமல்ல, பொருளாதார ரீதியிலும் ஜப்பன் சக்தி வாய்ந்த நாடாக உலகில் இடம்பெற்று விட்டது என்று நிருபிக்கப் பட்டு விட்டது''—

இப்படி ஏஜென்ஸி அதிகாரி ஒருவர் சொன்னுர். (எ)

★ பாலியல் குற்றச்சாட்டு

## ஜப்பான் அமைச்சரவை பிரதம செயலர் ராஜினுமா

டோக்கியோ ஆக 26

பாலியல் குற்றச்சாட்டைத் தொடர்ந்து ஜப்பான் அமைச்சரவையின் பிரதவு செயலாளர் திரு.டொக்கு யமஷிட்டா நேற்று ராஜினுமாச் செய்தார்

ஜப்பானின் புதிய பிரதமர் டோஷிகி கைபுவின் வலதுகரமாக இவர் விளங்கிவந்தார்.

21 வயதான ஹோட்டல் பெண் ஊழியர் ஒருவடன் 69 வயதான இவர் மூன்று ஆண்டுகளாக தகாததொடர்புவைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டதை இவர் ஒப்புக் கொண்டார்.

பாலியல குற்றச்சாட்டின் மீது திரு சுசுகியூனே கடந்த மாதம் பிரதமர் பதவியை ராஜினுமாச் செய்தது தெரிந்ததே. (எ)

● கட்டுப்பாடிழந்த நிலையில்

## பூமியை நோக்கி வரும் செய்மதியை மீட்க கொலம்பியா விண்கலம் அனுப்பப்படும்!

### விஞ்ஞானிகள் அறிவிப்பு

வாஷிங்டன், ஆக 26

கட்டுப்பாடிழந்த நிலையில் பூமியைநோக்கி வந்துகொண்டிருக்கும் செய்மதி ஒன்றை நடுவானில் வைத்து மீட்பதற்கு கொலம்பியா விண்கலத்தை பயன்படுத்தப்போவதாக நாஸா அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டு ஏப்ரலில் இச்செய்மதியை சலஞ்சர் விண்கலம் வானில் ஏவியது.

இச்செய்மதி விண்ணில் 57 பரிசோதனைகளை நடத்தியது.

இப்போது இந்தச் செய்மதி பூமியில் இருந்து 265 மைல் தொலைவில் உள்ளது. மாதத்திற்கு 6 முதல் 9 கிலோ மீற்றர் வேகத்தில் இச்செய்மதி பூமியை நோக்கி வந்துகொண்டிருந்தது.

சூரியப் புயல் காரணமாக அது வேகமாக பூமியை நோக்கி தற்சமயம் வந்து கொண்டிருக்கிறது.

தற்போதைய வேகப்படி பார்த்தால் 1990 ஜனவரியில் இச்செய்மதி பூமியில் வந்து விழும்.

5 ஆயிரத்து 600 ருத்தல் எடையுள்ள இச்செய்மதி 430 துண்டுகளாக் கொண்டது.

பூமியின் மீது இது மோதி விழுந்தால், மக்கள் பெரும் பாதிப்படையமாட்டார்கள் என்று கருதப்படுகிறது.

ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா, தென்கிழக்கு ஆகிய நாடுகள், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இச்செய்மதி அல்லது அதன் துகள்கள் தாக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இச்செய்மதி பூமியின் மீது மோதி வெடித்துச் சிதறிஞல் அது சேகரித்து வைத்துள்ள அரிய தகவல்கள் கிடைக்காமற் போய்விடும் என்று விஞ்ஞானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனுல் நவம்பரில் அனுப்பப்படவுள்ள கொலம்பியா விண்கலத்தின் வானவெளி இரகசியப் பயணத்தை ஒத்தி வைத்து, அதை டிசம்பரில் அனுப்புவதன் மூலம் இச்செய்மதியை நடுவானில் வைத்து மீட்க உதவும்படி நாஸா அதிகாரிகள் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளனர் (எ)

## இந்திய - நேபாள உறவு சீராகும் என நம்பிக்கை!

காத்மண்டு, ஆக 26

இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் நேற்று மாலை நேபாள மன்னர் பிரேந்திராவை அவரது மாளிகையில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திஞர்.

சீர்குலைந்திருக்கும் இரு நாட்டு உறவைச் சீராக்குவது, அதுதொடர்பாக அடுத்த மாதம் பெல்கிறேட்டில் அணிசேரா இயக்க மாநாடு நடக்கும் போது இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவது ஆகியன பற்றி அமைச்சர் நரசிம்மராவ் நேபாளமன்னர் பிரேந்திரா, பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சருடன் பேச்சுக்கள் நடத்திஞர்.

பேச்சுக்கள் திருப்திகரமாக அமைந்தன என்று நம்பிக்கை தெரிவித்த திரு. ராவ் இரு நாடுகளின் இராஜதந்திர உறவு சீராக அமையும் சாத்தியம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (எ)

# அணுக்கதிர் வீச்சிஞல் உயிர் வீழ்ச்சி

அமெரிக்காவிலுள்ள நியுமெக்ஸிக்கோ மாநிலத்தின் அலமொகார்டோ பகுதியில் 1945 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி காலை 5.30 மணியளவில் சில விநாடிகளுக்கு சூரியோதயமே ஆனற்போன்ற ஒளி தோன்றி மறைகின்றது.

உலகின் முதல் அணுகுண்டு அதனை உருவாக்கியவர்களின் எதிர்பார்ப்புக்கு மேலாகவே தன் அழிவை நிருபித்து மறைகின்றது.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் நாகசாகி ஹிரோஷிமா நகரங்களின் மீது வீசப்பட்ட அணுதண்டுகள் பல்லாயிரக்கான உயிர்களைக் கொன்று குவித்தன.

ஜப்பானிய நகரங்கள்மீது வீசப்பட்ட அணுகுண்டுகள் யுரேனியம் என்ற தனிமத்தின் ஐசோடோப்புகள் ஆகும். இவை காற்று வெடிப்பாக 2000 அடி உயரத்திற்குச் சற்றே மேலாக வெடிக்கப்பட்டன.

ஹிரோஷிமாவில் 78,000 பேர் கொல்லப்பட்டனர். 37,000 பேர் காயமடைந்தனர்.

நாகசாகியில் இறந்தவர்கள் 24,000 காயமடைந்தவர்கள் 23,000.

அரை மைல் தூரத்திற்கு மரணம் 90 விதமாக இருந்தது. ஒன்றரை மைல் தூரத்திற்கு 50 விதமாக இருந்தது.

மேலும் இரண்டு மைல் தொலைவு வரை கொண்டிருந்த கட்டங்கள் அழிக்கப்பட்டன. [illegible] டிஞல் ஏற்பட்ட நாசம் என்ருலும், அதனுள் கதிர் வீச்சு காரணமாக 60 வீதத்தினரும் இடிந்த கட்டடங்களினுல் 20 வீதத்தினரும் கருங்கதிர் வீச்சிஞல் 20 வீதத்தினரும் மாண்டனர்.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானுக்கு ஏற்பட்ட அணுகுண்டு நாசத்தால் ஆக்கவேலைக்கு அணுசக்தி என்ற முழக்கத்தை கேட்க நேரிடும் போதெல்லாம் அணுசக்தியோடு இணைந்த கதிர்வீச்சினல் ஏற்படும் தீங்குகளும் நினைவில் எழாமலிருப்பதில்லை.

### கதிர் வீச்சின் கடின குணங்கள்

கதிர்வீச்சுகள் தன்மைகளை உணராது கதிரியக்கப் பொருள்களை தகுந்த பாதுகாப்போடு கையாண்டாலும், அப்படிக் கையாண்டவர்களுக்கு சரும வியாதிகள், புற்றுநோய் ஏற்படுவதுடன் சிலர் உயிரிழக்கவும் நேரிடுகிறது இவை மனிதன் கதிர்வீச்சின் விளைவுகளை உணர்ந்து கொள்ள அடிகோலின.

கதிர்வீச்சிஞல் விளையும் தீங்குகளை இருவகைப்படுத்தலாம்.

ஒன்று தனக்குறு விளைவுகள் மற்றென்று சந்ததி விளைவுகள்.

### தனக்குறு விளைவுகள்

அணுக்கதிர்களுக்கு உட்பட்ட ஒருவனுக்கு ஏற்படும் விளைவுகள் அவனை மட்டும் பாதிக்குமாயின் அவற்றை 'தனக்குறு விளைவுகள்' என்கிறுேம்.

இவை செல்களின் அழிவால் ஏற்படுபவை. உடலுறுப்புகளின் வளர்ச்சிக்கும், சக்திக்கும் முக்கிய பங்கு வகிப்பவை இந்தச் செல்களே.

அவையே அணுக்கதிர்களால் பாதிக்கப்படும்போது, சம்பந்தப்பட்ட உறுப்புகள் நிரந்தரமாகப் பாதிப்பை அடைகின்றன.

இதனை உடனடி விளைவுகள் (Immediate effects) எனவும் கூறுவர்.

### சந்ததி விளைவுகள்

இவை அணுக்கதிர்களால் தாக்கப்பட்ட உயிரினங்களின் சந்ததிகளைப் பாதிப்பனவாகும். உயிரினங்களில் இனவிருத்தி செல் என்று ஒன்று உண்டு.

இதில் குரோமோசோம்கள் பெரும் பங்கு வகிக்கின்றன; இவை ஓர் உயிர் உருவாக்கப்படும்போது அதன் தாயினத்திடமிருந்து பெறப்படுபவையாகும் என வேதான் பெற்றோரிடம் காணப்படும் இந்த குரோமோசோம்கள் தன்னுள் உள்ள கெடுதலை தன் சந்ததிகளுக்கும் ஏற்படுத்திதுகின்றன.

இவை சேதமடைந்தால் இனவிருத்தி செல்களைச் சீர்படுத்த இயலாது. எவ்வளவு குறைவான அணுக்கதிர்களால் பாதிக்கப்பட்டாலும் இந்த இனவிருத்தி செல்களில் சிறிதளவேனும் பாதிப்பை ஏற்படுத்தியே தீரும்.

### கதிர்வீச்சிஞல் ஏற்படும் தீங்குகள்

தனக்குறு விளைவுகள்

உடனடி விளைவுகள்

1. தோல் சிவத்தல் 2. தோல் புண் (எதிரிமா) 3. இரத்தத்தில் வெள்ளணுமாற்றம்.

தாமத விளைவுகள்; 1. புற்றுநோயைத் தூண்டல் 2. கழலைகள் ஏற்படல் 3. லுகேமியா 4. குறைந்த ஆயுட்காலம்.

சந்ததி விளைவுகள்; 1; மந்தபுத்தி 2. ஹெமோபிலியா என்ற ரத்தம் உறையும் தன்மை. 3. உயர வளர்ச்சியின்மை.

இன்று அணுக்கதிர் சமபந்தப்பட்ட துறையில் பணிபுரிவோருக்கும், இனி பணியில் அமரப் போகிறவர்களுக்கும், தீங்குகள் இருவழிகளில் நேரலாம்.

1. சுற்றுப்புறங்களில் கதிரியக்கத்திஞல் ஏற்படும் அணுக்கதிர்களால் விளையும் தீங்குகள்.

2. வாயு, திரவ நிலையிலுள்ள கதிர்ப்பொருள்கள் உடலினுள் புகுவதால் வரும் தீங்குகள்.

மேற்கூறப்பட்ட கதிர்வீச்சு விளைவுகளிலிருந்து தற்காத்துக்கொள்ள பாதுகாப்பு முறைகளை நாம் நன்கு கையாண்டாலும் அது அவ்வளவு முழுமையாக இராது.

இதற்கு உதாரணம் ரஷ்யாவில் 1986 ஏப்ரல் 26 இல் நடந்த நமக்கு நன்கு பரிச்சயமான செர்னேபில் விபத்து ஆகும்.

தற்போது அணுமின் உலையின் கதிர்வீச்சின் அபாயத்தைத் தடுப்பதற்காக அமெரிக்கா புதிய முறையைக் கையாண்டு வருகிறதாம். அதன் முடிவுகள் பிற்பாடுதான் நமக்குத் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!



கிளை:
P. I. பர்ணண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனு வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்;

# உதயன்

27 · 08 · 1989 ஞாயிற்றுக்கிழமை

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!



P. I. பர்ணண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்;

### ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கியில்

## 907 குடும்பங்களுக்கு நாளை நிவாரணப் பணம்

மீளக் குடியமர்த்தலுக்கான முதல் கட்ட நிவாரணத்துக்கு பெயர் அறிவிக்கப்பட்டும், இதுவரை நிவாரணம் பெறாத மேலும் 907 குடும்பங்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்:

இந்தக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வழங்கப்பட உள்ளன.

பிரஸ்தாப கொடுப்பனவுகளுக்கான கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

சுந்தர்மடம் [J/51] 238:
நல்லூர் வடக்கு [J/52] 60:
திருநெல்வேலி மேற்கு [J/54] 47.
திருநெல்வேலி கிழக்கு [J/55] 103
கோண்டாவில் மேற்கு [J/56] 98.
கோண்டாவில் கிழக்கு [J/57] 178.
கொக்குவில் கிழக்கு [J/58] 47.
கொக்குவில் மேற்கு [J/59] 57
கொக்குவில் மத்தி [J 60] 79

(இ-9)

எமது புதிய வெளியீடுகள்

1. கார்த்திக் - ரம்யாகிருஷ்ணன் - அஸ்வினி நடித்த
காதல் ஓய்வதில்லை (ஒரிஜினல்)

2. மோகன்குமார் - S. S. சந்திரன் - செந்தில் ராதாரவி நடித்த
அத்தனை பேரும் உத்தமர்தானு (ஒரிஜினல்)

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (1901)

உங்கள் வீட்டு மங்கள வைபவங்களுக்குத் தேவையான
★ பூச்செண்டுகளும் ★ கதிரைகள்
★ பீங்கான் - கிளாஸ் - ரே
வகைகளையும் குறைந்த வாடகையில் பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்!

பிறைற் ஹவுஸ்
(புனித சந்தியோமையோர் ஆலய மருங்கு)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/3574)

## வதந்திகளை நம்பி இடம்பெயர வேண்டாம்

### பரு. பிரசைகள் குழு அறிக்கை

சரவெட்டி, ஆகஸ்ட் 27

"செப்டம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் பருத்தித்துறைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும், அப்போது 15 வயது முதல் 35 வயதானவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் நிலவும் வதந்திகளை நம்பி சொந்த இடங்களை விட்டு வெளியேறி அல்லற்பட வேண்டாம்."

பருத்தித்துறைப் பிரசைகள் குழு விடுத்த அறிக்கையில் இப்படிப் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரசைகள் குழு புலோலி இந்திய அமைதி காக்கும் படைப் பொறுப்பதிகாரியைச் சந்தித்த பின் மேற்கண்ட அறிக்கையை விடுத்தது.

பருத்தித்துறைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை என்றும் வதந்திகளைப் பொதுமக்கள் நம்பி அச்சமடையத் தேவையில்லை என்றும் பொதுமக்கள் தத்தமது இடங்களிலேயே வழமை போல் வாழலாம் என்றும் புலோலியில் உள்ள இந்திய அமைதி காக்கும் படைப் பொறுப்பதிகாரி பருத்தித்துறை பிரசைகள் குழுவினரிடம் உறுதி அளித்துள்ளார்.

(இ 70)

### சிப்பாய்களும் கைது!

தென் பகுதியில் அண்மையில் தீவிரவாத சந்தேக நபர்கள் என்று கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இலங்கை இராணுவ வீரர்கள் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-ஏ)

### கைஸ் உறுப்பினர்...

நேற்று 26 ஆம் திகதி காலை 10 மணியளவில் அமைப்பு ஒன்றினால் சுற்றிவளைக்கப்பட்டது;

இச்சம்பவம் தொடர்பாக அமைப்பினரின் வேண்டுகோளின் பேரில் அவர்களது முகாமில் எமது தோழர்கள் உரையாடிக்கொண்டிருந்தனர்;

அப்போது வெளிப்புறத்தில் நின்ற எமது தோழர்கள் மீது அலுவலகம் ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது எமது தோழர்களான பிரபா, சங்கர் ஆகிய இருவரும் கொலையுண்டனர் - என்று கூறப்பட்டுள்ளது (ஒ)

## தவிர்க்க முடியாத நிலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புகளும் ஏற்படமாட்டாது.

எனினும் தவிர்க்கமுடியாத சிரமம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எம்முடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் அத்தகைய நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இன்றைய அரசியல்சூழ்நிலை தொடர்பாக ஈ பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் குறித்துப் —

ஜனாதிபதிக்கும், மந்திரிக்கும் கூட பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் பாதுகாப்புப் படைகள் இருப்பது பற்றியும் இந்த அறிக்கையின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் அமைதியாகவும் பதற்றமின்றியும் வாழக்கூடிய சூழநிலை ஏற்பட்டுள்ளது: அன்று தமிழ் பேசும் மக்கள் எத்தகைய கெடுபிடிகளுக்கு முகம்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்களோ அதே நிலை இன்று தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் சமாதானமாகவும்; அமைதியாகவும் வாழ்வதை விரும்பாத பேரினவாத அரச சக்திகள் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்தும் நோக்குடன், அந்நிய ஏகாதிபத்திய ஏஜண்டுகளால் திட்டமிடப்பட்ட முறையில் தமிழர்களின் நலன்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வரும் குழுக்களுக்கு இலங்கை அரசு ஆயுதமும், பணமும் வழங்கியதன் மூலம், தமிழர்களையே மோதவிடும் தந்திரோபாயத்தை மீண்டும் செயற்படுத்த உள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக இந்திய அமைதிப்படையினர் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருப்பதாலும்; ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை இராணுவம் முகாம்களில் முடங்கியிருக்க நிர்ப்பந்திக்கப் பட்டமையினாலுமே தமிழ் பேசும் மக்கள் அமைதியாகவாழ முடிகின்றது என்னும் உண்மையை தமிழ் பேசும் மக்களும், மருத்துவசதிக்காகவும், பாதுகாப்புக்காகவும் - வடக்கு கிழக்கை நோக்கி வந்துள்ள சிங்கள மக்களும் இக்கட்டத்திலாவது புரிந்துகொள்ள வேண்டும்.

எமக்கெதிராக பிற்போக்கு சக்திகள் விசமப்பிரசாரம்செய்வது போன்று நாம் தமிழ் பேசும் மாணவர்களின் கல்விக்கு எவ்வகையிலும் இடையூறாக இருக்கமாட்டோம் என்பதை மீண்டும் வலியுறுத்துவதோடு, ஸ்ரீலங்கா அரச படைகளிலும், சமூகவிரோத சக்திகளினதும் அடாவடித்தனங்களிலிருந்து தமிழ் பேசும்மக்களை நிரந்தரமாக விடுவித்து பாதுகாக்கும் எமது போராட்டத்திற்கு தமிழ் பேசும்மக்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கோருகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இத்தாவிலில்

இத்தாவில் பண்தரிப்பு நிலையத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒருவரின் சடலம் நேற்றுக் காணப்பட்டது.

கொலையுண்டவர் இத்தாவில் சதாபுரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு யோகராசா (வயது 26) என அடையாளம் காணப்பட்டார்: இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் கூறப்பட்டது.

## இந்தியப்படை வெளியேற்றம்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மில்லை. நாடாளுமன்றத்திலேயே எமது தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க எவ்வித பொறிமுறையற்ற ஆற்றலற்ற சபையாக அது இருப்பதையும் நாடாளுமன்றத்திற்கு வெளியே இராணுவமயமாக்கல் நடைபெறும் போது உள்ளே ஜனநாயகம் இருக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம்;

எனினும் சபைக்கு மக்கள் வழங்கும் சட்டபூர்வ அங்கத்துவம் இன்னுமிருப்பதால் எமது குரல்வளையை நசுக்குவதை தடுக்கும் ஓர் பிரச்சார மேடையாக அதனைப் பயன்படுத்தலாம் என முடிவெடுத்தோம்.

அதேபோலவே நாம் இறுதியில் ஆயுதம் தாங்க நேரிட்டதும் தற்பாதுகாப்பிற்காகவேயன்றி மோதலுக்காகஅல்ல இவ்வாயுதங்களை நாம் பெற்றது குறித்து மிக கேவலமான வதந்திகள் திட்டமிட்டு பரப்பப்படுகின்றன;

உண்மையில் எமதுசொந்தப் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியாத நிலையில் மக்களின் பாதுகாப்பினை எங்ஙனம் உறுதிப்படுத்த முடியும் என்ற நிலையிலேயே நாம் ஆயுதங்களை பெற நேரிட்டது;

இலங்கை அரசிடமிருந்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சட்டரீதியான பாதுகாப்பிற்கான ஆயுதங்களைப் பெற்று[illegible]

அதேசமயம் [illegible] சுத்திற்கு முற்றாக பாதுகாப்பும் எமது செயற்பாடுகளுக்கு வன்முறை மூலம் தடை விதிக்கும் நிலைமைக்கும் இந்தியப் படையினரால் உத்தரவாதமளிக்கமுடியாத நிலையில் ஒப்படைத்த ஆயுதங்களை திருப்பித்தருமாறு வலியுறுத்தினோம்;

அதன் ஒரு பகுதியான ஆயுதங்களை திருப்பி பெற்றிருக்கின்றோம்; வெளிப்படையாக பெறப்பட்ட இவ்வாயுதங்கள் குறித்து அதிகமாக அலட்டிக்கொள்ளும் சக்திகள் தங்களிடமுள்ள ஆயுதம் பற்றிய கணக்கினை மக்கள் முன் வைக்கவேண்டும் என இக்கட்டத்தில் கோரிக்கை விடுகிறோம்:

இந்தியப் படைகள் வெளியேற்றம் தொடர்பாக எமக்கு இரு கருத்துக்கள் இடையாது; உடனடி வெளியேற்றம் நடைமுறைக்கு சாத்தியப்படாத நிலையில் படையினரின் வெளியேற்றம் குறித்து திட்டவட்டமான கால எல்லை தீர்மானிக்கப்பட வேண்டும்.

இம்முடிவானது அவரவர் பக்கம் சார்ந்தோ அல்லது தன்னிச்சையாக எடுக்கப்படாமல் முத்தரப்பினரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலமே தீர்மானிக்கப்பட வேண்டியதே எமது நிலைப்பாடாகும்

அன்றி ஏட்டிக்குப் போட்டியாக இரு அரசுகளும் செயற்பட்டால் படையினரின் வெளியேற்றம் தடைப்படும் அல்லது [illegible] நாம் அஞ்சுகிறோம்;

அதே சமயம் இந்தியப் படைகளுடன் மோதல் தொடர்வதும், எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு தமது பொருளாதாரத்தையும், பாதுகாப்பினையும் நிர்ணயித்துக்கொள்ளக்கூடிய பொறிமுறையையும், பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்திலிருந்து விடுபடக்கூடிய அதிகார வரம்பொன்றையும், உள்ளடக்கிய அரசியல் வரையறுப்புத் தொடர்பான நிச்சயமின்மையுமே மிக முக்கிய அடிப்படைப் பிரச்சினைகளாகும்;

இவற்றுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நிபந்தனையற்ற நிரந்தரப்போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு முத்தரப்பு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்; இத்தீர்வுகள் முன்னுரிமையடிப்படையில் படிப்படியாகவும் பின்னர் சமாந்தரமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் பேசும் மக்களுக்கான தற்காலிக இடைக்கால அரசியல் தீர்வு இவ்வாறே அமைய முடியும் என பூரணமாக நம்புகிறோம்;

எனவே, எமது நிலைப்பாடு குறித்து கண்டனங்கள் தெரிவித்தவர்கள் மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் தங்கள் நிலைகளை மீளாய்வு செய்து எம்மைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்: -இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்;

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் நடராஜா ஐங்கரன்

[யாழ். மத்திய கல்லூரி, 5 ஆம் வருட மாணவன்]

இவர் நடராஜா (நடராஜா & பிறதஸ், திருநெல்வேலி சந்தி), பாக்கியலெட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், றஜனி, பாஸ்கரன், பிரபாகரன், நிசாகரன், சசிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
மா. நடராஜா.

12/1, கந்தப்புராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்; (1902)

### திருமதி சின்னம்மா நாகலிங்கம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னம்மா நாகலிங்கம் அவர்கள் 26-8-89இல் சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற Auditor நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சவுந்தரநாயகம் (உப அரசாங்க அதிபர்), திருமதி பரமேஸ்வரி மகேசன், Dr. ராஜதுரை, செல்வராஜா (Income Tax Assessor) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேசன், ராணி, லீலாமணி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருக்கேசன் (கனடா), மோகனக்குமாரி (கனடா), சந்திராணி (கனடா), சரோஜினி, ஜயந்தினி, கிறீஸ்காந்தன் (U K). கிவானி, தவரூபன், கிரிதரன், சாந்தினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், மைதிலியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-8 89 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேசன்

477, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம். (1903)

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை திருஞானசம்பந்தர்

(கணபதிப்பிள்ளை)

ஐயாத்துரை திருஞானசம்பந்தர் காலமானார் இவர் இரசம்மாவின் அன்புக்கணவரும், அரியநாயகம் [நிர்வாக உத்தியோகத்தர் யாழ்போதனு வைத்தியசாலை], பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, பாலசுப்பிரமணியம், [ஜெய கிருஷ்ணு ஜுவலஸ்], நடராஜா [ஜேர்மனி], நகுலேஸ்வரி, தியாகராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற கனகரத்தினம் [செட்டியார்), சுப்பிரமணியம் [நில அளவை உதவி அத்தியட்சகர் [கெப்பிட்டிகலாவ], மகேந்திரன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), இராசநாயகி, தெய்வநாயகி, வேதநாயகி, ஆகியோரின் அன்பு மாமனும் சர்வேந்திரன் [ஜேர்மனி], காலம் சென்ற சுரேந்திரன், கீதா செல்வி சந்திரிகா, தேவகி, வாசுகி, கனகேஸ்வரன், ராஜேந்திரன். கனகேஸ்வரி, [ஜேர்மனி), கனகவல்லி, கனகதாஸ், கனகராஜா [ஜேர்மனி]. சனகேந்திரன் [ஜேர்மனி], காலம் சென்ற பாபுஜி. சந்திரகாந்தன், [ஜேர்மனி]. சிறிகாந். தமயந்தி, பிரதீபன், விஜிதன், சருணகரன், வனிதா, ஜெனகரன், சுரேந்திரன், சதீஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனரும், அருண் [ஜர்மனி], இன் பூட்டனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27- 08- 89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பய மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்:

தகவல்: தி. பாலசுப்பிரமணியம்
336/24, ராஜா தியேட்டர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [1823]

### திரு. சின்னத்தம்பி செல்வநாயகம்

உடுவில் ஆர்க்லேன் சின்னத்தம்பி செல்வநாயகம் அவர்கள் 26-08-89 காலமாகிவிட்டார். இவர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் தமயந்தியின் (ஆசிரியை ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்) அருமைத் தந்தையும் காலம் சென்ற சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் இளையமகனும் காலம் சென்ற மாணிக்கம் செல்லையா, பூபதி அவர்களின் மருமகனும், காலம்சென்ற சரவணமுத்து (திருமலை) திருமதி சரஸ்வதி சண்முகநாதன் (ஓய்வு பெற்ற நெசவாசிரியை) செல்வி லட்சுமி சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியை) திருமதி சோதிராணி செல்வமாணிக்கம் (R.M P ஏருவூர்) அவர்களின் அன்புச் சகோதரனும் காலம்சென்ற செல்லையா செல்வமாணிக்கம் (பொலீஸ் திணைக்களம்) சரஸ்வதி (விகிதர் தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஞானமலர் (இனுவில் அ.மி.த.க.பா.) திருமதி மங்கையற்கரசி (திருமலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27-08-89 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்: இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
க. சண்முகநாதன்
(மைத்துனர்)

ஆர்க்லேன்,
உடுவில்: (1738)

### திரு. சரவணமுத்து நடராசா

நந்தாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சரவணமுத்து நடராசா காலமானார்: அன்னாரின் ஈமக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் 27-08-89 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கோம்பையன் மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
ந சற்குணநாதன்
(மகன்)

கொக்குவில், மேற்கு (1826)

### திரு. சு. மயில்வாகனம்

(கணக்காளர்)

(முன்னுள் நிதி முகாமையாளர், விவசாய அமைச்சு நிதி முகாமையாளர், காணி சீர்திருத்த இலாகா).

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்றதிரு.சிவகுருநாதர் சுப்பையா, திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின், சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற, கொக்குவில் சட்டத்தரணி ஞானசுந்தரம், திருமதி: செல்லம்மா ஆகியோரின் மருமகனும், 1203 கே. கே: எஸ்' வீதி யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான, திரு: சுப்பையா மயில்வாகனம் (25 - 8 - 89) சிவபதமடைந்தார்;

அன்னார், ஞானரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், ரகுவரன் (லண்டன்), வனஜா (அன்ரிகுவா), அகிலன் (லண்டன்), சிறீதரன் (யாழ். மருத்துவக்கல்லூரி). ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைவராகினிதேவி (லண்டன்), Dr. விக்கினராஜா (அன்ரிகுவா), ஆகியோரின்: அன்பு மாமனும், கோபி, ரமேஷ் சங்கரி, ஆகியோரின், அன்புப் பேரனும், தவமணி, சிவகுரு (யாழ். மாவட்டப் பணிப்பாளர் கமத்தொழில் காப்புறுதிச்சபை), ஆகியோரின், அன்புச் சகோதரரும், ஞானம்பிகை, ஞானபாக்கியம், ஞானசகுந்தலா, காலஞ்சென்ற ஞானசம்பந்தர், ஞானம்பாள், ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர்.

ஈமக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மகன் ஸ்ரீதரன்.

1203 K. K. S; வீதி,
யாழ்ப்பாணம்; [1824]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் நாவலர்வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-08-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org